இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 20 | திகதி : 24.11.2019 | விலை : 30.00

## "நன்நடத்தையுள்ள முன்மாதிரியான வாழ்வு வாழ நீங்கள் அழைக்கப்படுகின்றீர்கள்"

### - நற்கருணைப் பணியாளர் நியமன நிகழ்வில் யாழ் ஆயர்



யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பங்குகளில் இருந்து பயிற்சி பெற்ற பத்து நற்கருணைப் பணியாளர்களை, நியமிக்கும் திருப்பலி கடந்த 12.11.2019 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் இடம்பெற்றது. இத்திருப்பலியில் மறையுரையாற்றும் போது ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தமது மறையுரையில் குருக்களோடு இணைந்து இறை மக்களுக்கு நற்கருணை வழங்குவதும் வீடுகளில் இருக்கும் நோயாளர்களுக்கும், முதியோருக்கும், சாகும் தருவாயில் இருப்போருக்கும் நற்கருணை வழங்குவது முக்கிய கடமை என்றும் தெரிவித்த ஆயர் அவர்கள் இப்பணியின் மேன்மையையும் புனிதத்தன்மையையும் உணர்ந்து ஆன்மீக வாழ்வில் புனிதமாகவும், ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாகவும் வாழ வேண்டும் என்றும் நற்கருணை விருந்தில் பங்கெடுப்பதன் மூலம் ஒரே உடலின் உறுப்புக்கள் என்பதற்கிணங்க அன்புறவிலும் ஒன்றிப்பிலும் வாழ வேண்டும் என்பதையும் வலியுத்தினார்.

மணியந்தோட்டம் யாழ் அடைக்கல அன்னை ஆலயம், புங்குடுதீவு, இளவாலை, சக்கோட்டை, மிருசுவில் ஆகிய பங்குத் திருஅவையைச் சேர்ந்தோர் நியமிக்கப்பட்டனர்.யாழ் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள், பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குநர் .அருட்பணி யோ.யோ. மவுலிஸ் அடிகள் மற்றும் அருட்பணியாளர்களும் ஆயருடன் இணைந்து ஒப்புக்கொடுத்த இத் திருப்பலியில் ஏராளமான விசுவாசிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா





மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 15.10.2019 மாலை 4.30 மணிக்கு பாடசாலைத் திறந்த வெளியரங்கில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. 30 வருட யுத்த காலத்தின் பின்னர் இவ்வாறான பாடசாலைப் பரிசளிப்பு விழா வெகு சிறப்பாக அருட்பணி. அ. றொபின்சன் யோசவ் அதிபர் தலைமையில் இடம்பெற்றது புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் பங்கின் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் யஸ்ரின் பிரதம் விருந்தினராக வருகை தந்தார். பங்குத்தந்தை அருட்பணி S.M. சுதர்சன், கோட்டக் கல்லூரி அதிபர் திரு .S. சுப்பிரமணியேஸ்வரன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் திரு.சு.நேவிற் ஜீவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## டொன் பொஸ்கோ ஆங்கிலக் கற்கை நெறி பட்டமளிப்பு விழா





சலேசியன் சபைக் குருக்களினால் பற்றீசியன் உயர் கல்வி நிலையத்தில் நடாத்தப்பட்டு வரும் மூன்று மாத கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கிலக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து தேர்ச்சிபெற்ற 66 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஐப்பசி 15ம் திகதி பற்றீசியன் உயர் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்தார். இக் கல்விக்கூடமானது மாணவர்களை ஆங்கிலத்தில் முழுமையாகத் தேர்ச்சியுற வைப்பதுடன் முழு ஆளுமை வளர்ச்சியுடன் கூடிய நல்லொழுக்க நெறிகளையும் கற்றுக்கொடுப்பது குறிப்பிடத்தக்கது என்பதுடன் மறைமாவட்டம் எதிர்பார்ப்பதை சலேசியன் குருக்கள் நிறைவான பணியூடாக நிறைவேற்றுகின்றார்கள் எனவும் பிரதம விருந்தினர் தமது உரையில் குறிப்பிட்டார்.

## புதிய ஜனாதிபதி பேராயரைச் சந்தித்தார்



புதிதாகப் பதவியேற்றுள்ள இலங்கையின் 7வது நிறைவேற்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் கொழும்பு பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் பற்றியும், ஈஸ்டர் தாக்குதல் குறித்தான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

## தேசிய மட்ட ஆங்கில நாடகப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சாதனை






தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கிலமொழி உரையாடல் நாடகப் போட்டியின் கனிஷ்ட பிரிவில் யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இப்போட்டியின் சிறந்த நடிகராகத் தரம் 09 மாணவன் செல்வன் யோண்சன் இராஜ்குமார் அபிஷேக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந் நாடகத்தைக் கல்லூரி ஆசிரியர் திருமதி சிவனியா வரதாபரன் நெறிப்படுத்தியுள்ளார்.

## நாதமணி ஓசையென நான்காண்டுகள்...

நடையின் நின்றுயர் நாயகனாக
நான்காண்டுகள் நன்னடை பயிலும்
நமது திரு அவை ஆயரே வாழ்க!
நாதமணி ஓசையென
நாற்றிசையும் உந்தன் புகழ்
நலம் நலமென ஒலித்தது காண்
மரியன்னை வழி இயேசுவிடம் என்று
மணி மகுடம் தாங்கி நின்று
பணி வாழ்வில் கோதுமை மணியென
படைத்திட்ட பணித்தடங்கள்
இறைமக்கள் தம் விசுவாச வாழ்வதனில்
இற்றைப்படுத்தும் படிக்கற்கள் ஆயின காண்
இறையாட்சி விழுமியங்கள்
நல்லாட்சித் தத்துவங்கள்
இத்தலமீதில் நித்திலமாகிட
நீளும் சேவை நித்தமும் பயணிக்க
வற்றாத ஊற்றாம் வல்லவன் அருள் பெற்று
வல்ல பெரும் ஆயராக
வலம் வருவீர் வாழ்த்துகின்றோம்.

\- பாதுகாவலன் குடும்பம்



யாழ். ஆயரின் ஆயர் அருட்பொழிவு தினம் 28.11.2019

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### எம் பாவமே! எம் பாவமே! எம் பெரும் பாவமே....!

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. இலங்கைத் திருநாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகக் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் அரச அரியாசனம் அமர்ந்துள்ளார். புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்ற எதிர்பார்ப்புகள் கொண்ட எண்ண அலைகள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இல்லாது அனைவர் உள்ளங்களிலும் எழுந்த வண்ணம் உள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பல்வேறு படிப்பினைகளை இலங்கை அரசியல் வரலாற்றில் பதித்துள்ளது. அதில் முதன்மையானதாக தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் இல்லாமல் அல்லது அனுசரணை இல்லாமல் சிங்கள மக்களின் வாக்குகளைக் கொண்டே ஒருவர் ஜனாதிபதியாக வரலாம் என்ற புதிய திருப்பம் அரசியல் வரலாற்றில் பதிவாகியுள்ளது. கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் இனத்தவரின் வாக்குகள் தான் இறுதியில் அவர்களைத் தலைநிமிர வைத்தது. அதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக 2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட்டுப் பெற்றுக்கொண்ட வெற்றியைக் குறிப்பிடலாம்.

சிறு கல்லைக்கொண்டு தாவீது கோலியாத்தை வீழ்த்தியதுபோல தமிழ், முஸ்லிம்களின் வாக்குகளைக் கொண்டு சிங்களவர்கள் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் வீழ்த்தி வெற்றிபெற்று வந்த வரலாறு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் நிலை என்ன? என்ற முதன்மையான வினா இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஒன்றுமட்டும் உண்மை தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறையும் சிங்கள இனத்தவருக்குத்தான் தமது வாக்கினை வழங்கினர். தம்மினம் சார்ந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு வழங்கவில்லை. துரதிஸ்ட வசமாக தாம் ஆதரித்த சிங்கள இனத்தைச் சார்ந்த ஜனாதிபதி வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார். கட்சிக்குள்ளிருந்த உட்பூசல்களும், தலைமைத்துவத்தின் நெறி பிறழ்வுகளும் அவரின் தோல்விக்குக் காரணம் எனத் தற்போது பல புதிய சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. எது எவ்வாறாக இருப்பினும் தமிழ், முஸ்லிம் சமூகம் சிங்கள சமூகத்தையே ஆதரித்து நின்றமை நிதர்சனமாகும். அதனிலும் பகடைக்காய்களாக உதைபட்டதும் அப்பட்டமான நிதர்சனமாகும்.

புதிய ஜனாதிபதி தனது பதவியேற்பின் போது நான் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி என்ற கூற்று ஒன்றை திருவாய் மலர்ந்தார். அதன் பொருள் தனக்கு எதிராக வாக்களித்தவர்களுக்கும் தானே ஜனாதிபதி என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ், முஸ்லிம் இனத்தவராகிய நாம் ஜனாதிபதியின் இந்தக் கூற்றின் மூலம் உணரத்தக்க படிப்பினை யாது என்பதை சிந்தித்தாக வேண்டும்.

தமிழினம் முப்பது ஆண்டுகாலப் போரியல் வரலாற்றில் பல்வேறு கசப்பான படிப்பினைகளை சிங்களத் தலைமைத்துவங்களிடமிருந்தும் நமது தலைமைத் துவங்களிடமிருந்தும் கற்றுக்கொண்டது. இன்றும் கற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. நமக்கு எந்த வகையிலும் நிரந்தரமான விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்பதை இவை கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றுமில்லை எனக் கூறியதுடன், 1983ம் ஆண்டு யூலை மாத இனக்கலவரத்தில் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தபோது தேவையானால் நான் பிசாசுடனும் கூட்டுச்சேர்வேன் எனக் கூறினார். இதே வரிசையிலும் பாணியிலும் அனைத்துத் தலைமைத்துவங்களும் காலடி வைத்தன. 2015ம ஆண்டு தமிழ், முஸ்லிம் இனத்தவரின் வாக்குகளில் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை நீக்குமாறு கேட்டபோது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள் நான் கூட்டிவருகிறேன் எனக் கூறினார்.

தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும். தீர்க்கப்படும் எனத் தமிழ்த் தலைமைத்துவங்களும் கால எல்லைகளை வகுத்த வண்ணமே இருக்கின்றன. ஒவ்வொரு தைப்பொங்கலாக... சித்திரை வருடப்பிறப்புக்களாக...., தீபாவளிகளாக...., கிறிஸ்மஸ் ஆகக் காத்திருந்து காத்திருந்து காலங்கள் போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலையிலே தான் மீண்டும் ஒரு புதிய யுகம் நவம்பர் 18 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. அந்த யுகத்திலும் அர்த்தம் உள்ள சமிக்ஞைகள் தெரியுமா என்ற அங்கலாய்ப்புடன் வாரம் ஒன்றைக் கடத்திவிட்டோம். ஆக்கபூர்வமான சமிக்ஞைகள் தெரிவதாகத் தெரியவில்லை.

வழக்கம் போல கிழக்குத்தான் உதிக்கின்றது. தமிழ், முஸ்லிம் இனத்தவரின் உரிமைகள், சுதந்திரங்கள் தொடர்பாக சிங்களத் தலைமைத்துவங்களின் மனங்களில் அமைதியான எண்ணங்கள் நல்லாட்சி மற்றும் ஜனநாயகத் தத்துவத்தில் உதிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். அவ்வாறு உதிக்காது விடில் அது எம் பாவமே! எம் பாவமே! எம் பெரும் பாவமே....!

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## அறிவித்தல்

யாழ் மறைமாவட்ட **அருட்பணியாளர் றெனால்ட் ஜோர்ஜ்** (தேசிய அடையாள அட்டை இல.683471941 V) அவர்கள் குருத்துவப் பணிகளில் இருந்து யாழ் ஆயரினால் இடைநிறுத்தப்பட்டுள்ளார். அதாவது குருத்துவப் பணிகளான திருப்பலி நிறைவேற்றுவது, மறையுரை ஆற்றுவது, பாவசங்கீத்தனம் கேட்டல், மற்றைய அருட்சாதனங்களை நிறைவேற்றுதல் ஆகிய பணிகளில் இருந்து யாழ் ஆயரினால் இடை நிறுத்தப்பட்டுள்ளார். மேலும் எந்தவிதமான பண சேகரிப்புக்களுக்கும், கொடுக்கல் வாங்கல்களுக்கும் இவருக்கு அனுமதி இல்லை என்பதுடன் அக்கொடுக்கல் வாங்கல்களுக்கு யாழ் மறைமாவட்டம் பொறுப்பு இல்லை என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆயர் இல்லம்,**
**தபால் பெட்டி இல. 2**
**யாழ்ப்பாணம்.**

**பேரருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**யாழ். ஆயர்**

## வருங்காலத்தைக் கட்டியமைக்க
### பல்சமயத் தலைவர்களுக்குத் திருத்தந்தை அழைப்பு

வருங்காலத்தைக் கட்டியமைக்கும் பாதையில் மதங்களின் பங்களிப்பும் இன்றியமையாதது. நீதிக்கும், அமைதிக்கும், மதங்கள் பணியாற்றுவதன் வழியாக, சிறந்ததொரு வருங்காலத்திற்குரிய இளம் தலைமுறையினரின் உரிமையை நாம் உறுதி செய்யலாம். மனித மாண்பைப் பாதுகாக்கவும், பொது இல்லமாகிய இவ்வுலகின் இயற்கை அழகையும் வளத்தையும் காத்திடவும், இக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கிறது.

அச்சமின்றி ஒருவரோடு ஒருவர் கலந்துரை யாடி, நமக்குள் இருக்கும் ஆன்மீகப் பாரம்பரியங்களைப் பகிர்ந்துகொள்வதன் வழியாக, இவ்வுலக வளர்ச்சிப் பாதையில் நாம் பங்களிக்க முடியும். நம்மிடையே வாழும் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், பூர்வீக இனத்தவர், மத சிறுபான்மையினர் ஆகியோரின் குரல்களுக்கு செவிமடுக்கும் நாம், ஒன்றிணைந்து உழைக்க வேண்டிய தேவை உள்ளது.

மனித மாண்பை உயர்த்திப் பிடித்தல், மனச்சான்று மற்றும் மத விடுதலையை மதித்தல் என்ற பாதையை, நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## உலக அமைதிக்காக, மதங்கள் ஒன்றிணைந்து உழைப்பது தேவை

உலக அமைதிக்காக உழைக்கவேண்டியது, கத்தோலிக்க திருஅவையின் முக்கியப் பணியாகவும், வருங்காலத் தலைமுறைக்குரிய சேவையாகவும் உள்ளது என ஐ.நா. பாதுகாப்பு அவைக்கூட்டத்தில் உரையாற்றினார், பேராயர் பெர்னார்தித்தோ அவுசா.

**அமைதியைக் கட்டியெழுப்புதலும் நிலைநாட்டலும்**

உலக அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் ஒப்புரவின் பங்கு' என்ற தலைப்பில், ஐநா. பாதுகாப்பு அவையில் இடம்பெற்ற கூட்டத்தில், திருப்பீடத்தின் பிரதிநிதியாக உரை வழங்கிய பேராயர் அவுசா அவர்கள், வரலாறு முழுவதும் கத்தோலிக்க திருஅவை, மக்களிடையே, ஒன்றிப்பின் கருவியாகவும் அடையாளமாகவும் தொடர்ந்து செயற்பட்டுவருவதைச் சுட்டிக்காட்டினார்

மத்திய ஆபிரிக்காவில் இடம்பெற்ற மோதல்களில், மதங்களின் பங்களிப்பை முக்கியப்படுத்தி தீ மூட்ட விரும்பியவர்கள் மத்தியில், பாங்கிக் கத்தோலிக்கப் பேராயரும், அந்நகரில் பணியாற்றும் இவாஞ்சலிக்கல் போதகரும், இஸ்லாமிய மதகுரு ஒருவரும், துணிச்சலுடன் ஒன்றிணைந்து நின்று, அமைதிக்காகக் குரல் கொடுத்ததைச் சுட்டிக்காட்டிய பேராயர் அவுசா அவர்கள், அந்நாட்டில் 2015ல் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டபோது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஸ்லாமிய மதகுருவோடு ஒரே வண்டியில் பொது மக்களிடையே பயணம் செய்து, அமைதிக்கு அழைப்பு விடுத்தது, நல்ல பலன்களைக் கொணர்ந்துள்ளது எனக் கூறினார்.

தென் சூடான் அரசியல் தலைவர்களின் கால்களை முத்தி செய்து நாட்டின் அமைதிக்காக ஒன்றிணைந்து உழைக்குமாறு திருத்தந்தை அழைப்பை விடுத்தது குறித்தும் தன் உரையில் எடுத்துரைத்தார், பேராயர் அவுசா.

நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும், பிரிவினைகளை வெற்றிகொள்ளும் நோக்கத்தில், உடன்பிறந்த உணர்வில் ஒன்றிணைந்து உழைக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தவே, இச்செயலைத் திருத்தந்தை ஆற்றினார் என பேராயர் அவுசா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

ஒப்புரவு என்பது, குற்றம் புரிந்தவர்கள் தண்டனையின்றிச் செல்வதற்குரிய ஒரு வழியாக நோக்கப்படக்கூடாது என்பதையும் வலியுறுத்திய பேராயர், குற்றம் புரிந்தவர்கள் அதற்குரிய தண்டனையைப் பெறுவதையும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதற்குரிய நிவாரணங்களைப் பெறுவதையும் உறுதி செய்வதை, ஒப்புரவு முயற்சிகள், தங்கள் நோக்கத்தின் ஒரு பகுதியாகக் கொண்டிருக்கவேண்டும் எனவும் விண்ணப்பித்தார்.

அபுதாபியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும், இஸ்லாம், அல் அசார் தலைமைக் குருவுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட, உடன்பிறந்த உணர்வு குறித்த ஒப்பந்தம், மக்களை ஒன்றிணைக்கவும், உலக அமைதியைக் கொணரவும், மதங்கள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துவதாக உள்ளது, எனத் தன் உரையில் மேலும் குறிப்பிட்டார் பேராயர் அவுசா.

## ஆசியாவில் கிறிஸ்தவர்களின் உரிமைகள் ஒடுக்கப்பட்டுள்ளன

மனிதகுல ஒட்டுமொத்த மனச்சான்றின் காயத்தில் இன்னும் வலியை வழங்கிக் கொண்டிருப்பதாக, இவ்வுலகில் நடந்த அணுக்குண்டுத் தாக்குதல் உள்ளது எனக் கவலையை வெளியிட்டார் கர்தினால் சார்லஸ் போ.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தாய்லாந்து மற்றும் ஜப்பான் நாட்டிற்குத் திருத்தூதுப் பயணத்தைத் துவங்குவதை முன்னிட்டு ZENIT செய்தி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவர், கர்தினால் போ அவர்கள், இக்காலத்தில் ஆசிய நாடுகளில் கிறிஸ்தவர்கள் தங்கள் மத நம்பிக்கைகளுக்காகக் கொடுமைகளை அனுபவிப்பது தொடர்கின்றது என எடுத்துரைத்தார்.

இன்றைய ஆசியச் சூழல்களில் கிறிஸ்தவர்களின் உரிமைகள் ஒடுக்கப்பட்டு உள்ளன என்பது குறித்து, அனைத்துலக சமுதாயத்தின் கவனம் ஈர்க்கப்படவில்லை என்ற கவலையையும் வெளியிட்ட மியான்மார் கர்தினால் போ அவர்கள், இதையெல்லாம் தாண்டி நம்பிக்கையின் அடையாளங்களும் ஆசியக் கிறிஸ்தவர்களின் மத்தியில் காணப்படுகின்றன எனவும் கூறினார்.

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்களில், அணுகுண்டுத் தாக்குதல்களின் விளைவுகளைப் பார்த்த பின்னரும், ஆசிய நாடுகளின் அணுஆயுத மோகம் மறையவில்லை என்ற வருத்தத்தையும் வெளியிட்ட கர்தினால் போ அவர்கள், திருத்தந்தையின் இத்திருப்பயணம் அணு ஆயுதம் குறித்த புதிய புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும் எனத் தான் நம்புவதாகவும் கூறினார்.

# யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் நான்காம் ஆண்டுப் பங்களிப்புகள்

**அறிமுகம்:**

ஆயர் அவர்கள் மறைமாவட்டத்தின் வளர்ச்சியே முன்னுரிமை என்ற அடிப்படையில் அர்ப்பணத்தோடு பணியாற்றி வருவதை அவரது அனைத்துப் பணிகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆன்மீகப் பணி, மறைக்கல்விப் பணி, கல்விப்பணி, இளைஞர்களின் தொழில்வாய்ப்பு, எனப் பணிகள் விரிவடைந்து செல்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆயரின் பணிகளைத் தொகுத்து எழுதும்போது, நமது ஆயர் இத்தனை பணிகளையும் இவ்வருடத்தில் ஆற்றியுள்ளார் எனக் காணும்போதும் வியப்பும் மகிழ்ச்சியுமாக உள்ளது.

**குருக்கள் நலன்**

குருக்களின் உருவாக்கத்திலும் அவர்களின் குருத்துவ வாழ்விலும் ஆயர் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றார். அவர்கள் மீது அன்பும் அக்கறையும் காட்டிவருவதோடு அவர்களின் நலன்களை மேம்படுத்தும் பணிகளையும் தொடர்ந்து ஆற்றி வருகின்றார். அன்போடு வழிநடத்த வேண்டியவர்களை அணைத்தும், பொறுமையோடு சகிக்கப்பட வேண்டியவர்களை சகித்தும், கண்டிக்க வேண்டியவர்களைக் கண்டித்தும், தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டிப்பதும் இவரது நல்ல அணுகுமுறையாக உள்ளது.

மறைமாவட்டத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பொருத்தமான குருக்களை மேற்படிப்பிற்கு அனுப்பி வைப்பதில் கருத்தாக உள்ளார். பலவருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் பூனேயிலுள்ள குருமடத்திற்கு குருமட மாணவர்களை அனுப்பி உருவாக்கும் முறை இருந்து வந்தது. தற்போது ஆயர் அங்கு நமது குருவானவர் ஒருவரை மேற்படிப்புக்காக அனுப்பி வைத்துள்ளமை நல்ல தொடக்கமாகும் அங்கேயே நமதுஆயரும்குருத்துவஉருவாக்கத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

குருக்கள் தம் தியானத்தை மேற்கொள்ளும் பண்டத்தரிப்பு தியான இல்லத்தைப் புனரமைத்தும் திருத்தங்கள் மேற்கொண்டும் வருகின்றார் ஆயர் அவர்கள். குருக்களின் நலனைக் கருத்திற்கொண்டு புதிய பங்குமனைகள் கட்டப்பட்டும் புனரமைக்கப்பட்டும் வருகின்றன. கூழாமுறிப்பு, மாங்குளம், அக்கராயன்குளம், பரந்தன், தர்மபுரம், குருநகர், அல்லைப்பிட்டி, ஊறணி, பலாலி, குளமங்கால், வலைப்பாடு போன்ற இடங்களில் இவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கவை.

அத்தோடு குருக்களுக்குப் புதியமோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்திற்கு ஆயர் புதிய வான் ஒன்றும் கணனிகளும் வழங்கியுள்ளார். சிறிய குருமடமானது சஜித் பிரேமதாசாவின் பங்களிப்போடு முற்றாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மேலும் யாழ் ஆயர் இல்லச் சிற்றாலயம் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. அத்தோடு ஆயரில்ல வீதிகள் தார் போடப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**அழைத்தலை ஊக்குவித்தல்**

குருக்கள் பொருத்தமானவர்களை அடையாளம் கண்டு குருத்துவ அழைத்தலுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் என்பதிலே ஆவலாக உள்ளார். குருத்துவ அழைத்தலுக்குப் பொருத்தமானவர்களைக் ஊக்குவிக்க வேண்டும், குறைகள் கொண்டோரைத் திருத்தியெடுக்க முயற்சிக்க வேண்டும், பொருத்தமற்றவர்களை குருத்துவத்திற்கு அனுமதிக்கக்கூடாது போன்ற விடயங்களில் ஆயர் மிகவும் கருத்தாயுள்ளார். பல்கலைக்கழக அனுமதி பெற்ற குருமட மாணவர்களைக் குருக்களின் நெறிப்படுத்தலோடு அங்கு கற்க அனுமதிப்பது காலமாற்றத்தின் தேவையெனக் கருதிச் செயற்பட்டு வருகின்றார்.

**ஆலயக் கட்டிடவேலைகள்**

மக்கள் இறைவனோடு உறவாடும் இல்லமாக ஆலயங்கள் திகழ்கின்றன என்பதைக் கருத்திற்கொண்டு இதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். அந்த வகையில் கட்டிமுடிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் புதிய ஆலயங்கள்



மற்றும் முகப்பு வேலைகள் பல. அளம்பில் புனித அந்தோனியார் திருத்தலம், முல்லைத் தீவுப் பங்கில், முல்லைத்தீவுக் கப்பலேந்தி மாதா, பழைய வைத்தியசாலைச் சிற்றாலயம், உடுப்புக்குளம் குழந்தை இயேசு (இது சென்றவருடம் முடிக்கப்பட்டது). இரணைப்பாலைப் பங்கின் ஆனந்தபுரத்தில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டு நாட்டப்பட்டுள்ளது.

கூழாமுறிப்புப் பங்கின் புனித சூசையப்பர், பூதன் வயலில் கார்மேல் அன்னை, முத்தையன்கட்டு புனித சூசையப்பர், தண்ணியூற்றுப் புனித அந்தோனியார், ஒட்டுசுட்டான் கிறிஸ்து அரசர், மாஞ்சோலை வைத்தியசாலைச் சிற்றாலயம். அக்கராயன்குளம் பங்கின் மணியன் குளத்தில் குழந்தை இயேசு. கிளிநொச்சிப் பங்கில் திரேசம்மாள் ஆலய போட்டிக்கோ மற்றும்அம்பாள்குளத்தில்சதாசகாய அன்னை. பளைப்பங்கிலுள்ள முகமாலை அன்னை வேளாங்கண்ணி. பண்டத்தரிப்புப் பங்கில் பண்டத்தரிப்பு செபமாலைமாதா மற்றும் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார். சில்லாலைப் பங்கில் வைத்தியசாலைச் சிற்றாலயம், குருநகர் பங்கில் கொலைவிலக்கி மாதா. அனலைதீவில் ஆரோக்கிய அன்னை. தர்மபுரப்பங்கின் கல்லாறில் குழந்தை இயேசு ஆலயப் புரமைப்பு. மணல்காடு பங்கு புனித அந்தோனியார் கோயில் முகப்பு மற்றும் புதிய கோயில் கட்டுவதற்கான ஆயத்தங்களும். கோப்பாய்ப் பங்கு புனித சூசையப்பர் ஆலயம் மற்றும் செபமாலை அன்னை ஆலய முகப்புவேலை. பருத்தித்துறைப் பங்கில் தும்பளை புனித மரியன்னை ஆலயம். உருத்திரபுரம் பங்கில், பத்திமாகோயில் போட்டிக்கோ, ஜெயந்தி நகர் யூதாததேயு ஆலயப் போட்டிக்கோ புனித ஆந்தோனியார் ஆலய போட்டிக்கோ.

**மறைக்கல்விப் பணி**

ஏற்கனவே மறையாசிரியர் வதிப்பிடப்



பயிற்சி இடம்பெற்று வந்தபோதும் இடையில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் ஆயர் மீண்டும் இதனை ஆரம்பித்து ஒரு அணியினர் பயிற்சி முடித்து வெளியேறியுள்ளனர். கிளிநொச்சி அன்னை திரேசா ஆலய வளாகத்தில் மறையாசிரியர்களுக்கான மண்டபம் அத்திவாரம் இடப்பட்டுள்ளது. பண்டத்தரிப்புப் பங்கில் பற்றிமா அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி வகுப்பிற்கான மண்டபம் கட்டப்பட்டுள்ளது. புதிய மறைக் கல்வி நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கும் ஆயர் திட்டமிட்டு வருகின்றார்.

**நற்கருணைப் பணியாளர் நியமனம்**

பங்குகளின் தேவைகளைப் பொறுத்து நற்கருணைப் பணியாளர்களை ஏற்படுத்த வேண்டும் என்பதிலே ஆயர அவர்கள் தெளிவாக இருக்கிறார். அண்மையிலே 6 பங்குகளைச் சேர்ந்த 10 நற்கருணைப் பணியாளர்களைப் புனித மரியன்னை பேராலயத்தில் நியம் செய்தார்.

**துறவறசபைகள் வழி பணிகள்**

இரணப்பாலையில் அன்புச் சகோதரிகளுக்கான புதிய மடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இச்சபைச் சகோதரிகளால் சில்லாலையில் முதியோருக்கான தனியார் இல்லம் பராமரிக்கப்படுகின்றது. மண்டைதீவுப் பங்கில் சல்வற்றோறியன் சபைச் சகோதரிகள் தங்கியிருந்துபணியாற்றிவருகின்றனர். அவர்களுக்கானமடம் கட்டப்படுகின்றது. பாசையூரில், திருக் குடும்பக் கன்னியர் சபையின் யூலாலி இல்லம் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது. தாளையடியில் 15 ஆண்டுகளின் பின்னர் கார்மேல் சபை

அருட்பணி. இராசேந்திரம் ஸ்ரலின்

அருட்சகோதரிகளின் இல்லம் கட்டப்பட்டு மீண்டும்திறந்துவைக்கப்பட்டுள்ளது. திருச்சிலுவைக் கன்னியர் சபை வைத்தியசாலை பரந்தனில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாரந்தனைப் பங்கிற்கு அருட்சகோதரிகளை வரவழைத்து அங்கும் ஆன்மீகப் பணியை விரிவுபடுத்தும் முயற்சிகளை ஆயர் அவர்கள் ஆரம்பித்துள்ளார்.




**கல்விப் பணிவிரிவாக்கம்**

1. அரசியல் வாதிகள் ஆயரைச் சந்திக்க வருகின்றபோது இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கவனம் செலுத்துமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றார்.

2. ஆயரின் முயற்சியால், யாழ் சம்பத்தரிசியார் கல்லூரியில் புதிதாக கார்டினர் கட்டிடத்தொகுதி உருவாக்கப்பட்டு, அண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இங்கு இன்னும் பல புதிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கும் ஆயர் திட்டமிட்டுள்ளார்.

3. அல்லைப்பிட்டியில் மொன்போர்ட்சபை அருட்சகோதரர்கள் சர்வதேச பாடசாலைக்கான கட்டடிட வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. அவர்களது பணிக்கு ஆதரவாக, குளுனிசபை அருள் சகோதரிகள் ஆரம்பக் கல்வியைக் கவனிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.

4. தாளையடிப் பங்கில் அருட்சகோதரி ஒருவர் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் உருவாக்கம் வளர்ச்சி காண்கின்றது.

5. யாழ்பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத்துறையின் முதலாவது சர்வதேச மாநாடு ஆயரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல்நாட்டு அறிஞர்கள் இதிலே தமது ஆக்கங்களைப் படைத்தார்கள். இது ஒரு முக்கிய நிகழ்வாக விளங்குகின்றது.

6. அறிவியல் நகரில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆன்மீகப் பணியக்த்திற்கான காணியைப் பெற்றுள்ளதோடு, அங்கு அதற்கான பணிமனை கட்டும் பணியையும் திட்டமிட்டு வருகின்றார்.

7. அகவொளி நிறுவனத்தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் விஞ்ஞான மாணிப் படிப்பை மேற்கொள்வதற்கான முன்னாயத்தமாக ஆயரின் பங்களிப்போடு நூலகம் விருத்தி செய்தல் . இடம்பெற்று வருகின்றது.

8. அல்லைப்பிட்டியில் புனித பிலிப்புநேரியார் பங்கின் சிறார்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக ஒரு முன்பள்ளி



கட்டிமுடிக்கப்பட்டது.

9. மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதற்காகவே குருக்கள் பாடசாலைகளில் நியமிக்கப்படுகின்றனர். தகுதியிருந்த போதிலும் கல்வித் திணைக்கள நிர்வாகம் சார் நியமனங்களைத் தவிர்த்து பாடசாலைகளில் பணியாற்றுவது முக்கியம் என்பது மறைந்த நம் ஆயர் பேரருட் திரு தீயோகுப்பிள்ளை ஆண்டகையின் கொள்கை. அதற்கொப்பவே ஆயர் அவர்களும் கலாநிதிப்பட்டம் பெற்றிருந்த போதும் கல்வித் திணைக்களப் பதிவியைத் தவிர்த்து அதிபர் பதவியில் நிலைத்திருந்தார். அத்தகைய பதவி பொது நிலையினருக்குக் கிடைப்பதே மேலானது என்பதே ஆயரின் கருத்து.

**தொழிற்கல்வி**

மாணவர்கள் பாடசாலைப் படிப்பை முடித்தபின்னர் தொழிற் கல்விக்கானஉளச் சார்பு கொண்டோருக்கான தொழிற் பயிற்சி வழங்கித் தரமான சான்றிதழ் அளிப்பதன் மூலம் அவர்களது எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்கோடு பற்றிசீயன் தொழிற் பயிற்சிநிலையத்தினை சலேசியசபைக் குருக்களின் நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளார். அங்கு உடனடியாக ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அன்புப் பணி**

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு கியூடெக் நிறுவனத்தினூடாக இவர்களுக்கான உதவிகளையும் வழங்கியிருந்தார்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# கல்லறைகள் நாம் வாழ வழிசொல்லித்தரும் கருவறைகள்

கார்த்திகை மாதம் என்றால் எம் கண்கள் முன் விரிவது கல்லறைகள். இதை கல்லறைகள் மாதம் என்றும், ஆத்துமாக்கள் மாதம் என்றும் கூறுவார்கள். இம் மாதம் முழுவதும் இறந்துபோன விசுவாசிகளுக்காகச் சிறப்பாக நமது பெற்றோருக்காக, உடன்பிறப்புக்களுக்காக, தமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த அதிபர், ஆசிரியர்களுக்காக, நமக்கு விசுவாசத்தை ஊட்டிய இறந்துபோன குருக்கள், துறவிகள், கன்னியர்களுக்காக இன்னும் குறிப்பாக இம்மாதத்திலே மண்மீட்பிற்காகக் களமாடி மரித்தவர்களுக்காகவும், போரிலே கொல்லப்பட்டவர்களுக்காகவும் சிறப்பாக திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து இவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் செபிப்பது கிறிஸ்தவ கடமையும் வழக்கமுமாக இருந்து வருகின்றது.



உரோமையர்களின் சிந்தனையின்படி கல்லறைகள், சேமக்காலைகள் இறந்தோர் வாழும் நகரங்களாகக் கருதப்பட்டது. தொடக்க கால கிறிஸ்தவர்கள் வேதகலாபனையின் போது கொல்லப்பட்ட தமது உறவினரை, ஆயர்களை, விசுவாசிகளை அடக்கம் செய்த கல்லறைகளில் ஒன்றுகூடிச் செபித்து திருப்பலிகளை ஒப்புக்கொடுத்து வந்தார்கள் என்புதை இன்றும் உரோமையிலே அமைந்திருக்கின்ற நிலக்கீழ் கல்லறைகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும் பழைய ஏற்பாட்டு மக்கபேயர் 2ம் புத்தகத்திலே (2 மக்க 12:38-45) இறந்தவர்களுக்காகப் பலி ஒப்புக்கொடுத்தார்கள் என்றும், பாவம் போக்கும் அப்பலியானது சிறந்த கைமாறை அவர்களுக்கு இறைவனிடமிருந்து பெற்றுக் கொடுக்கும் என்பது யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது என்பதற்கு சான்றாக அமைகின்றது.

**இறந்தவர்களுக்காக நாம் ஏன் செபிப்ப வேண்டும்? திருப்பலிகள் ஒப்புக்கொடுக்க வேண்டும்?**

கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி (CCC 954-949) சொல்லித் தருவதன்படி, திருஅவையானது மூன்று வகையான பிரிவுகளாகக் கருதப்படுகின்றது.

**1.மகிமையின் திருஅவை**

இறந்துபோன விசுவாசிகள் கடவுளின் இரக்கத்தினால் அவரின் பேரின்பத்தில் இணைந்திருப்பார்கள் (புனிதர்கள், வேத சாட்சிகள்)

**2. துன்றும் திருஅவை**

இறந்த விசுவாசிகள் தங்களை இன்னுமாகத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் நிலையில் இருப்பவர்கள் (உத்தரிக்கும் ஸ்தலம்)

**3. பயணம் செய் யும் திருஅவை**

விண்ணகம் நோக்கிய நமது விசுவாசப் பயணத்திலே இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகள். பவுலடிகளாரின் இறையியல் சிந்தனையின்படி இறந்த அனைவரும் உயிர்த்தெழுவோம் "இறந்தவர்கள் அழிவுக்குரியவர்களாய் அடக்கம் பண்ணப் படுகிறார்கள். ஆனால் இயேசுவின் உயிர்ப்பினால் அழிவற்றவர்களாய் எழுவர்'(1 கொரி15:42) ஆனால் எமது உயிர்ப்பு மட்டுமே எமக்கு விண்ணகத்தை பரிசாகத் தராது மாறாக நாம் எல்லோருமே கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக நிற்கவேண்டும். அப்போது நாம் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப கைமாறாகப் பெற்றுக் கொள்வோம். ( 2 கொரி 5 :10)

இந்த வகையில் நாம் இறைவனின் மோட்ச சன்னிதானத்தை அடைவதற்கு முன்னதாக எம்மைப் பரிசுத்தப்படுத்த வேண்டிய தேவையும் கடப்பாடும் எமக்கு உண்டு. எமது நன்மைகளுக்குப் பரிசாக மோட்சத்தைப் பெற்றாலும், எமது பாவங்களுக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளும் எம்மைப் பரிசுத்தப்படுத்தும் நிலைதான் இந்த "துன்புறும் திருஅவை' என்னும் உத்தரிக்கும் ஸ்தலத்திலே இடம் பெறுகிறது. இவர்களுக்கு என்று மோட்சம் முன்குறிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான வாயில் இன்னும் திறக்கப் படாத நிலையிலே, கடவுளின் இரக்கத்திற்காக ஏங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது.

எனவேதான் 'பயணம் செய்யும் திருஅவையிலே உள்ள விசுவாசிகள் இறந்து போன எம்முன்னோர்களுக்காகச் செபிக்கவும், ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடவும், திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து கடவுளின் கழிவிரக்கத்தை இவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும் அழைக்கப்படுகின்றோம்.

இந்த வகையில், இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் பற்றி மட்டுமல்ல, வாழ்ந்து மரித்தவர்களையும் பற்றியும் அதிகமாகச் சிந்திப்பவர்கள் கிறிஸ்தவர்கள் மட்டும்தான் என்று கூறினால் அது மிகையாகாது.மரித்தவர்களைப் பற்றிக் கூறும்போது டால்ஸ்ரோல் என்ற அறிஞர் பின் வருமாறு கூறுவார், 'இவ்வுலகில் வாழுகின்ற நாம் அனைவருமே ஒரு வகையிலே தூக்குக் கைதிகள்தான். என்ன, நாம் எப்போது தூக்கில் தொங்கவிடப்படப் போகிறோம் என்பது தான் எம்மில் யாருக்கும் தெரியாது" ஒரு கல்லறை மேல் எழுதப்பட்டிருந்த வாக்கியம் இது.

**நீ இருக்கும் இடத்தில் நான் இருந்தேன்: நான் இருக்கும் இடத்தில் நீ இருப்பாய்!**

இறந்தோரை எடுத்துச் செல்லும்வாகனத்தில் இப்படி எழுதப்பட்டிருந்தது **'இன்று நான் நாளை நீ, நாங்கள் உயிர்ப்புக்காகக் காத்திருக்கிறோம் நீங்கள் மரணத்திற்காகக் காத்திருக்கிறீர்கள்'** என்று வேறொரு கல்லறையில் எழுதப்பட்டிருந்த வாசகம் இது.

அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ்
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை

இந்த வாக்கியங்கள் எல்லாம் எம்மை அச்சுறுத்துவதற்கான வசனங்கள் அல்ல. மாறாக எம் வாழ்வைப் பற்றிச் சிந்திப்பதற்கான தருணங்கள். அதனால்தான் 'கல்லறைகள் நாம் வாழ வழி சொல்லும் கருவறைகள்'என்றுசொல்லப்படுகின்றது.

'மரணத்தைப் பற்றித் தெரியாதவனுக்கு வாழ்க்கையைப் பற்றித் தெரியாது என்று புனித அகுஸ்தினார் கூறுவார்.

ஈழத்தமிழர்கள் எமக்கு மரணம் என்பது ஒன்றும் புதியதல்ல. கல்லறைகள் எமக்கு ஒன்றும் பழக்கப்படாதவை அல்ல. மாறாக இக்கல்லறைகள் எமக்குச் சொல்லும் நலையாமை என்னும் பாடத்தை நாம் அடிக்கடி எம் நினைவில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

நாம் எம்மைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி எதற்காக நான் இறக்க வேண்டும் என்பதல்ல. இறப்பதற்கு நான் ஏன் பயப்படவேண்டும் என்பதேயாகும். லூக்கா 10: 22 இன்படி இறைவாக்கு உரைத்தேன், நோய்களைக் குணமாக்கினேன், பேய்களை ஓட்டினேன் என்று மகிழவேண்டாம். மாறாக விண்ணகத்தில் உங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றது என மகிழுங்கள் என்று இயேசு உரைக்கின்றார்.

உண்மையிலேயே கார்த்திகை மாதம் என்பது நாம் நினைப்பதைப் போல மரித்தோருக்காக ஏற்படுத்தப்பட்ட மாதம் அல்ல. மாறாக வாழ்வோருக்காகஏற்படுத்தப்பட்ட மாதம். மற்றைய மனிதர்களுக்குத்தான் மரணம் என்பது மனித வாழ்வின் முடிவு. ஆனால் கிறிஸ்தவர்களாகிய எமக்கு அது ஒது தொடக்கம். ஏனையவர்களுக்குத்தான் மரணம் ஒரு பயம். ஆனால் விசுவாசிகளாகிய எமக்கு ஒரு நிறைவு. ஏனென்றால் மரணத்தின் மூலம் தான் நாம் கிறிஸ்துவோடு முழுமையாக ஒன்றிக்கிறோம். மரணத்தின் மூலம்தான் நாம் முடிவில்லா வாழ்விற்குப் பிறக்கின்றோம்.

அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது - அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமை உள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது. (1 கொரி 15:42-43)

ஒரு ஆலம் விதைக்குத் தெரியாது தனக்குள்ளே இவ்வளவு பெரிய விருட்சம் உள்ளது என்று. ஒரு மாமர விதைக்குத் தெரியாது தனக்குள்ளே பல ஆயிரம் மாம்பழங்களைத் தரக்கூடிய மாமரம் உள்ளது என்று. ஆனால் அந்த விதை மண்ணோடு மடியும் போது தான் அது புதிய மரமாக உயிர்பெற்று எழுகின்றது. நாமும் கிறிஸ்துவுக்காய் மடியும் போது அவரோடு உயிர்பெற்று எழுவோம்...

# "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" சமூகத் தேவையே கடவுளின் விருப்பம்

"பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகி றேன்" என்பதன் கருத்தை நீங்கள்போய்க் கற்றுக் கொள்ளுங்கள்" (மத் 9:13)

எது உயர்ந்தது எது கடவுளுக்கு உகந்தது பலியா இரக்கமா? எனும் இவ்விறைவார்த்தை பெரும்பாலும் ஆராயப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை எது? எது என்பதை விட ஏன் என்பதுவே சரியான கேள்வியாகப் பார்வையாக இருக்க முடியும் ஏன் கடவுள் இப்படிக் கூறுகின்றார்? எனும் கேள்வி.

ஏனென்றால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறை வன் பலியை, விரும்புகின்றார். தான் குறிப்பிட்ட இடத்தில் பலி செலுத்த மக்களை அழைக்கின்றார். ஆனால் அவர் தம் பெயர் அதில் நிலைக்கும்படி உன் கடவுளாகிய ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில் நீ பாஸ்காப் பலியைச் செலுத்து கதிரவன் மறையும் மாலை வேளையில் நீ எகிப்திலிருந்து புறப்பட்ட அந்த நேரத்தில் பலி செலுத்து.(இச 16:6).

மக்கள் மத்தியில் எழக்கூடிய இரண்டு ஆபத்துகளை உணர்கிறார் இறைவன் (1) பிற தெய்வ வழிபாடுகளில் நம்பிக்கைகளில் விழுந்துவிடக்கூடிய ஆபத்து இது ஒரு சமூகத் தீமையாகும். ஏனென்றால் குறிப்பிட்ட ஒரு இறைநம்பிக்கையைச் சுற்றிக் கட்டியெழுப்பப்படும் ஒரு சமூகம் அந் நம்பிக்கையின் கூறுகளைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றத் தாழ்வு கொண்ட பல கடவுள் வழிபாட்டைக் கொண்டிருக்கும் சமூகம் தன்னிலே ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டு அக்கடவுளர்களின்பெயராலே அதைநியாயப்படுத்தவும் செய்கிறது. அதனாலேயே "யாவே" கடவுள் தன்னை ஒருவராகவும் மக்கள் மத்தியில் சமத்துவத்தை விரும்புபவராகவும் முன்னிறுத்துகிறார்.

பிற தெய்வ வழிபாடுகளில் ஆழ்ந்து தான் கட்டியெழுப்ப விரும்பும் சமத்துவச் சமூகத்தை அழித்துவிடக்கூடிய ஆபத்தை உணர்ந்து தனக்கே பலி செலுத்த அழைக்கிறார். அதற்காகவே உன் கடவுளாகிய ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில் பலி செலுத்து என்கிறார். இரண்டாவது எகிப்திய விடுதலை அனுபவத்தை மறந்து விடக்கூடிய ஆபத்து எனவே தான் எகிப்திலிருந்து வெளியேறிய நாளில் செலுத்திய பாஸ்கா அல்லது கடத்தலின் பலியை மீண்டும் மீண்டும் அதேநேரத்தில் செலுத்தக் கூறுகிறார்.

சமத்துவ சமூகத்தைக் கட்டிக்காக்க வேண்டிய தேவையும் விடுதலை அனுபவத்தை நினைவில் நிறுத்த வேண்டியதேவையும்பலிசெலுத்தும்பழக்கத்தால்மட்டுமேகட்டிக்காக்க முடியும். என்பதை உணரும் கடவுள் அதைத் தன் விருப்பமாக மாற்றிக்கொள்கிறார். சமூகத்தேவை கடவுளின் விருப்பமாகிறது. தான் புகழப்படவேண்டும் தனக்கு பெருமைசேர்க்கப்படவேண்டும்என்றெல்லாம் சமூகத்தின் தேவையைக் கருதி அதற்கு உதவும் பலியைத் தன் விருப்பமாகக் கடவுள் மாற்றிக்கொள்கிறார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களின் தேவை மாறுகிறது தொடர் அடிமைத்தனம் இப்போதும் உரோமையரின் ஆட்சியின் கீழ் வறுமை, நோய், அநீதி வரி, அளவுக்கதிகமான சட்டங்கள் ஒடுக்குமுறைகள் சண்டை சச்சரவுகள் என இரக்கத்திற்காக, அன்பிற்காக மக்கள் ஏங்கிய நாளில் கடவுளும் தன் விருப்பத்தில் மாற்றம் செய்து கொள்கிறார். இரக்கம் என் விருப்பம் என்கிறார்.

இரக்கத்திலும் பலியிலும் எது உயர்ந்தது எனும் தேடலிலிருந்து ஏன் கடவுள் இப்படித் தன் விருப்பங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார். என்று தேடத் தொடங்குவதாகக் கிடைக்கும் பதில் புரட்சிகரமானது சமூகத்தேவை மாறுகிறது எனவே கடவுளின் தேவையும் மாறுகிறது சமூகத் தேவையை ஒட்டியே கடவுளின் விருப்பம் அமைகிறது சமூகத்தேவையே இறைவனின் திருவுளம் என்றால் கடவுளின் திருவுளமும் சமூகத்தேவையும் ஒன்றே சமூகத் தேவையை அறிந்தவர் கடவுளின் திருவுளத்தை அறிகிறார். சமூத்தேவையை நிறைவேற்றுவர்.கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுகிறார். சமூகத்தை அறியாமல் நான் கடவுளின் திருவுளம் அறிவேன் என்பவர் பொய்யர்." ஆனால் அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள் அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும்" (மத் 6:33) எனும் இறைவார்த்தைகளின் பொருளும் இதுவே கடவுளுக்கு ஏற்புடையதை நாடுவது என்பது சமூக நலனை நாடுவதே.

எங்கு தொடங்குவது என்பதில் வேண்டுமானாலும் மாற்றுக்கருத்துக்கள் இருக்கலாம் ஆனால் கடவுளின் விருப்பத்தை நேரிய உள்ளத்தோடு நாடத்தொடங்கும் மனிதர் சமூகப் போராளியாக மாறிப்போவதும் சமூகநலனையே நாடி உழைப்பவர் இறைபிரசன்னத்தை இயல்பாகவே உணருவதும் தவிர்க்க இயலாதது.

அ.ஸ்ரெபான் றொக்சன்
O.L.R

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# புனிதர் வரிசையில் ஒரு புதுமையான மனிதன்

**எதிர்ப்புக்கள்**

இவர் ஆங்கில நாட்டிற்குத் திரும்பிய பொழுது பல எதிர்ப்புக்களைச் சந்தித்தார். இவரையிட்டுப் பல சந்தேகங்கள் எழுந்தன. கடவுளின் முன் இருந்தமையினால் அத்தனை எதிர்ப்புக்கள், குற்றச்சாட்டுக்கள், இவரையிட்டு எழுப்பிய சந்தேகங்களை அவர் வெற்றியோடும் உறுதியுடனும் சந்தித்தார். தனித்துவமான ஒரு மனிதர் இவர்.

திருத்தந்தை பதின்மூன்றாம் லியோ இவரை 1876 ஆம் ஆண்டில் ஒரு கருதினாலாக உயர்த்தினார். இவருக்கு முன்னர் வாழ்ந்த அனைவரையும் விட இவர் பல கத்தோலிக்கர் அல்லாதவர்கள் கத்தோலிக்க சபையைச் சாதகமாகப் பார்க்கச் செய்தார் என்று வரலாறு சான்று பகர்கின்றது.

1890ல் இவர் இறந்த பொழுது 15,000 - 20,000 மக்கள் வீதி வழி நின்று இவருக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர் என்று ஒரு ஊடகம் (Cork Examination) கூறிற்று.

என்னைக் கவர்ந்த காரணம் ஜோன் கென்றி நியூமன் பாடசாலை நாட்களில் இருந்து படிப்பவற்றைச் சீர்தூக்கி ஆய்வு செய்து விமர்சித்து எதையோ தேடினார். ஆம், இவர் இறுதிமட்டாகத் தேடினார். அதனால்தான் அவர் எழுதினார். " இறைவனுடைய திட்டத்தில் எனக்கோர் இடமுண்டு. ஒரு வேளை நான் இறந்த பின்னர்தான் அது என்ன என்பதை அறிவேனோ தெரியாது" இந்த வசனம் அவரது தேடலைத் தெளிவாக்கியது. இவர் அங்கிலிக்கன் சபையில் இருந்த பொழுதும் சரி கத்தோலிக்கத்தைத் தழுவியபொழுதும் சரி படிப்பவற்றை விமர்சித்தே படித்தார். பெற்றதைப் பெற்ற படியே உள்வாங்கியவர் அல்ல. (அதனால்தான் இவருக்கு சமியாக்குணம் என்றும் ஏற்பட்டதில்லை) இன்று அவர் உயிரோடிருப்பின் கத்தோலிக்க சடங்குகள் சட்டங்கள், படிப்பினைகள் பலவற்றைக் கடுமையாக விமர்சித்திருப்பார். போப் பிரான்சிஸ் அவர்களுக்கு ஒரு பாரிய பக்க துணையாக இருந்திருப்பார் என்பதில் எனக்கு இரண்டு கருத்துகள் கிடையாது.இவரது எழுத்துகளில் - நூல்கள், மடல்கள், பாடல்கள், உரைகள் போன்றவற்றில் பல ஆழமான கருத்துக்கள் செறிந்திருந்தன. காலத்தால் அழியாத கருத்துக்களாய் இருந்ததால், இன்றைய இந்த விஞ்ஞான உலகில் ஆழமான உளவி யல் நோக்கில், இன்றைய ஆன்மீகப் பார்வையில் அவை மிகவும் பொருத்தமாகவே காணப்படுகின்றது.


**உனது பாதை என்ன?**

இந்த உலகில், இந்த அண்டத்தில் உனக்கோர் இடமுண்டு. இது என்ன? இதுதான் உனது தேடல். குருத்துவத்துக்கு அப்பால், துறவறத்துக்கப்பால், திருமணத்திற்கு அப்பால் உனக்கு ஓர் அழைப்பு உண்டு. அது என்ன? இது தான் உன் வாழ்நாள்

**கரவையூர்ச் செல்வம்**

தேடல். அந்தத் தேடல்தான் உனது தனித்துவமான ஆன்மீகப் பயணம். இந்தப் பயணம் உன்னை மதத்தைத் தழுவிச் செல்ல உதவும். இந்தப் பயணம் கடினமானது. இருளைச் சந்திப்பாய். வனாந்தர நிலையைச் சந்திப்பாய். அதனால்தான் இந்த ஆன்மீகப் பயணத்தில் உனக்கு ஓர் உடன்பாடு மிக அவசியம்.

ஜோன் கென்றி நியூமனின் சில வரிகளை நான் எனது கருத்தரங்குகளில் மேற்கோள் காட்டுவது வழமையான ஒன்று. "வாழ்வாய் இருந்தால் மாற்றம் வேண்டும் முழுமையாக வாழ்வதாயின் அடிக்கடி மாற்றம் தேவை" இன்றைய ஆன்மீகப் பார்வையில் இவரது கூற்று முழுமையாகப் பொருந்தும். மனித வாழ்வு வாழ்வதற்கு அதாவது இந்த வாழ்வு நித்தமும் வளர்ச்சி பெறல் வேண்



ஜோன் ஹெறன்றி நியூமன்

டும். நோக்கம் வாழ்வதல்ல. வளர்வதல்ல நம்முள் இருக்கும் கடவுள் எம்மை வளரவும் முழுமை நோக்கி வாழவும் நித்தமும் அழைக்கின்றார். இந்த அழைப்பு அனைத்து மக்களுக்கும் உண்டு. இதையே, இயேசு தனது மறை உரையில் "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள்" (மத் 5:48) இந்த இயேசுவின் அழைப்பு அனைத்து மக்களுக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

இன்றைய பெயர்பெற்ற விஞ்ஞானி டேவிட் போம் (David Boom) "உடைபடாத முழுமை" என்று குறிப்பிட்டார். இதை எங்கள் இன்றைய மொழியில் கூறுவதாயின் கடவுள் உடைபடாத பிளவுபடாத முழுமை உள்ளவர். இந்த முழுமையை நோக்கிப் பயணிப்பது தான் ஆன்மீகம். மிகவும் மோசமான பிளவுபட்ட நாம் அனைவரும் அந்தப் பிளவுகளில் இருந்து பிரிவினைகளிலிருந்து விடுபட்டு அந்தப் பிளவு எதுவுமே படாத முழுமை நோக்கிப் பயணிக்க அழைக்கப்படுகின்றோம். இதையே கென்றி நியூமன், முழுமையாக வாழ்வதாயின் நாம் அடிக்கடி மாறவேண்டுமென்றார். ஒரு தொடர் மனமாற்றப் பயணம்.

இதை வலியுறுத்தி அவர் கூறிய இரண்டாவது "வாழ்வின் ஒரே அத்தாட்சி, மனித வளர்ச்சி" ஜோன் கென்றி நியூமனின் இன்னுமோர் கூற்றை எழுதி இக்கட்டுரையை முடித்துக்கொள்கின்றேன். "வாழ்வு ஒரு மடிவுக்கு வருமென்று பயப்படாதே : ஆனால் வாழ்வு ஓர் ஆரம்பமாக இருப்பதற்குப் பயப்படு" இதன் அர்த் தம் என்ன? உனது வாழ்க்கைப் பாதையை நீ தெரிந்து கொண்டு அந்த வாழ்க்கைப் பயணம் ஒரு முடிவுக்கு வருமென பயப்படாதே. உனது வாழ்க்கைப் பயணம் அந்த உடைபடாத பிளவு-படாத முழுமையில் முடியும் என்று பயப்படாதே. முரணாக அதுதான் உனது வாழ்வின் முழுமை, நிறைவு, மகிழ்வு.

ஆனால் உனது வாழ்வு என்றுமே மாறாமல், வளராமல் ஓர் ஆரம்பத்திலேயே நின்றுவிடுமானால், அதற்குப் பயப்படு. காரணம், கடவுளின் அழைப்பை நீ மறுத்து, உனது வாழ்வில் தேங்கிவிடுவதுதான் பாவம். இதுதான் பிசாசு. இந்தப் பிசாசை, இந்த பிசாசை துரத்துவோர்களினால் துரத்த முடியாது. ஒருவேளை இந்தப் பிள்வுபட்ட, பிரிவுள்ள 'பிசாசு' அவர்களைத் துரத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*(முற்றும்)*

---

மடியில் படுத்துக்கிடந்தபடி நிலா ஒளியில் நாங்கள் கதைகேட்ட பாட்டிகளெல்லாம் இப்போது கதை சொல்வதே இல்லை. சுருக்கம் விழுந்த தன் சேலைத்தலைப்பில் முடிந்து வைத்திருக்கும் சில்லறைகளை அவிழ்த்து இனிப்பு வாங்கச் சொல்லி இரகசியமாய் தருவதுபோல இதயத்து மடிப்புகளிலிருந்து இரசித்து பாட்டிகள் சொன்ன கதைகள் எல்லாம் மணல் நிறைந்த எம் முற்றத்து மாமரத்தடியில் இன்னமும் படுத்துக் கிடக்குமோ என்னவோ.

கதைகள் என்பவை வெறும் வார்த்தைகள் அல்லவே. தன்னைச் சுற்றி வலை பின்னி வைத்து நடுவில் உட்கார்ந்திருக்கும் சிலந்தி போல ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சூழக் கதைகளால் பின்னப்பட்டிருக்கிறான். ஓட்டுக்குள்ளே ஒழிந்து கிடக்கிற ஆமை போல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கதைகள் ஒழிந்துகொண்டே இருக்கின்றன. ஒரு கதைகூடக் கேட்காத மனிதன் என்று யாருமே இருந்துவிட முடியாது. இரத்த ஓட்டத்தைப்போல கதைகள் சத்தமில்லாமல் பயணித்துக்கொண்டே இருக்கின்றன.

மஞ்சள் பூக்கள் விழுந்துகிடக்கும் பூவரச மரத்தடியில் பேன் பார்த்தபடி அமர்ந்திருக்கும் சித்திமார்கள் பேசிப் பேசித் தீர்த்த அத்தனை கதைகளாலும் தானே நிறைந்து கிடந்தன அந்த மரத்தடி வேர்கள். எத்துணை குதூகலச் சிரிப்புக்கள். இந்தச் சிரிப்புச் சத்தத்தில்தானே பூவரச மொட்டுக்கள் வெடித்து மஞ்சள் மஞ்சளாய் பூக்கின்றன என்று நான் நினைத்துக் கொண்டதுண்டு.

பேசப்பேசக் கதைகள் முடிந்து போவதே இல்லை என்ற உண்மை உணர்ந்தது அங்குதான். இரண்டு வீட்டுக்குக் குறுக்கே இருக்கும் வேலியில் வைத்திருக்கும் பொட்டு (ஒருவர் குனிந்து போகக் கூடிய இடைவெளி) எம் கதை




கள் எனும் நதிகள் நடந்து போவதற்கு வெட்டிய வாய்க்கால்தானே. எங்கள் உறவின் உயிர் கதைகள் வழியேதானே துடித்துக்கொண்டிருந்தது.

இன்று கால்களில் தீப்பிடித்ததுபோல ஓடித்திரியும் மனிதர்களிடத்தில் கதைகள் தேங்கிய நீர்க்குட்டைபோல நாற்றமெடுத்துக் கிடக்கின்றன. வாழ்வின் கதை-களைப் பேசுவதற்கு இப்போதெல்லாம் இவர்களுக்கு நேரமே இல்லை. எவரின் கதைகளையும் இருந்து கேட்பதற்கும் யாரும் தயாராகவும் இல்லையே.

சலூன் கடைக்காரரின் கதிரையில் அமர்ந்தடி தன் வாழ்வின் கதை-தகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த உயர்தரம் படிக்கும் ரமேசின் கதைகளைக் கேட்குமளவு அவன் அப்பாவுக்கு நேரமிருந்திருந்தால், முகம் தெரியாத யாரோ ஒரு மனிதனிடம் ஏன் தன் வாழ்வின் இரகசியங்களைக் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

**அருட்பணி. எஸ்.அஜந்தன்**

சாதாரண தரம் படிக்கும் யஸ்மினின் முகத்தில் தெரிந்த குழப்பத்தைக் கவனித்து 'என்னாச்சுமா?' என்று அக்கறையோடு தலைதடவி அவளின் கதையைக் கேட்பதற்கு தொலைக்காட்சியை விட்டு கண் திரும்பாத அம்மா, அன்று இரவு அவள் துப்பட்டாவில் தூக்குப்போட்டுச் செத்துப்போய் கிடந்தபோது சோர்ந்து தொங்கிய அவளின் கால்களைக் கட்டிப்பிடித்தபடி 'ஏதாவது சொல்லம்மா, ஏதாவது பேசு'என்று தொண்டைகிழியக் கதறி என்ன பயன்?

பால்கொடுக்காத தாயின் மார்பு பால்கட்டி வலிப்பதுபோல, தம் கதைகளின் சோகங்களின் பாரம் தாங்காது பல மனிதர்கள் மாரடைப்பு வந்து மரணித்துப் போகிறார்கள்.

குடும்பம் கடவுளின் பரிசு, எதை எதையோ தேடித்திரிந்து வாழ்வைத் தொலைத்துவிடாதீர்கள். குடும்பமாக இருந்து உண்பதற்கும் கதைகளைப் பேசுவதற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

அண்டைக்கு மீறாக்கா வாயூறி வாயூறிச் சொல்லிக் கொண்டிருந்தா நேற்று இரவு நல்ல நிலவு. நானும் இவரும் பிள்ளைகளும் மாதுளை பூத்துக்கிடந்த எங்கட முத்தத்தில இருந்து கதைச்சுச் சிரிச்சுப் பேசிக்கொண்டே இருந்தோம். என்ர வாழ்க்கையில சந்தோசமான மறக்கேலாத நாள். கேட்டேன்

**"ஏன் நேற்று'**

**'நேற்று மின்சாரமில்லை**

மின்சாரமில்லா இரவுகளின் வாழ்க்கை ஆயிரம் நிலவுகளின் ஒளி-யோடு முற்றத்துக்கு வருகிறது.

நாங்களும் ஒரு மறக்க முடியாத நாள் செய்வோமா...?

# கிறிஸ்தவர்கள் திருமுழுக்குப்பெற்று அனுப்பப்பட்டவர்கள்

**முகவுரை**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபையின் நற்செய்திப்பணியின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உலகில் வாழும் அனைத்துக் கிறிஸ்தவருக்கும் உணர்த்தவும், கிறிஸ்தவர்களில் நற்செய்திப் பணிக்கான ஆர்வத்தைத் தூண்டவும் இவ்வருடம் ஐப்பசி மாதத்தை நற்செய்திப்பணி சிறப்பு மாதமாக அறிவித்தார். இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர், 1919, நவம்பர் 30, திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்கள் Maximum Illud எனும் சுற்றுமடலை வெளியிட்டதை, இவ்வருடம் நவம்பர் மாதம் 30ம் நாளில் மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் நினைவு கூருவது திருத்தந்தையின் இந்த அறிவிப்பின் பின்புலமாகும்.

Maximum Illud எனும் இச்சுற்றுமடல் திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களால் வெளியிடப்பட்ட திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றியதாகும். அன்றைய உலகளாவிய மக்கள் சமூகத்தின் வாழ்வியல் நிலையை கவனத்தில் கொண்டு, திருஅவையின் நற்செய்திப் பணியின் இயல்பையும், தன்மையையும், போக்கையும் அனைத்து நற்செய்திப் பணியாளருக்கும், அறிவுறுத்துவதற்காக இதனை வெளியிட்டார். இச்சுற்றுமடல் திருச்சபையின் நற்செய்திபணி பற்றிய தாய் ஏடாகும். கடந்த நூறுவருடங்களில் வெளிடப்பட்டுள்ள திருச்சபையின் நற்செய்திப்பணி பற்றிய ஏடுகளுக்கு இவ்வேடு இலக்கண வரம்பாய் அமைந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது அறிவிப்பில் கூறும் செய்திகளை அறியும் முன்னர் திருத்தந்தை 15ம் பெனடிக்றஅவர்களின்படிப்பினைகளைத்தொகுத்தறிந்து கொள்வோம்.

**திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களின் படிப்பினைகள்**

அ) முதலாம் உலக யுத்தம் முடிவுற்று, அதன் விளைவுகள் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலம். நவீனத்துவ சிந்தனை வளர்ச்சி பெற்றுவந்த காலம். மேற்கத்தேய துறவற சபையினர் காலணித்துவ ஆட்சியாளர்கள் கால்பதித்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டுவந்த காலம். அப்பின்னணியில் காலணித்துவ ஆட்சியாளரது நாடுகளின் எல்லை விரிவாக்க மனப்போக்கும், மக்களின் நிலவளத்தைத் தன்வயமாக்கும் போக்கும், மக்களின் கலாசாரம், வாழ்வியல் போக்கு, மக்களின் சமய நம்பிக்கைகளை மதியாத தன்மையும் போன்றவை நற்செய்தியாளருக்குரிய மனப்போக்கும், தன்மையும், மறைதூதுப்பணியின் நோக்கமும், போக்குமாகாது என்பது திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களின் முதல் அறிவுறுத்தலாகும்.

ஆ) எனவே, "திருஅவை எந்த இன மக்களுக்கும் அந்நியமானதல்ல! மக்கள் நலநோக்குடன், மக்களின் வாழ்வியல் கூறுகளுக்கு முன்னுரிமை அளித்து, இயேசுவின் அன்பால் தொடப்பட்டு, ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்துடன், தனது தூய்மையான நம்பிக்கை வாழ்வாலும், நற்செயல்களாலும் நற்செய்திப்பணி" (திப. 9:17; 1கொரி. 15:9-10) ஆற்றப்பட வேண்டும் என்று திருச்சபை யின் நற்செய்திப்பணிக்கு ஓர் புதிய வடிவத்தை அளிக்க முயன்றார்.

இ) திருச்சபையின் நற்செய்திப்பணி திருமுழுக்கின் போது கிறிஸ்தவர்கள் முதன்முறை அறிக்கையிட்ட நம்பிக்கையில், நம்பிக்கையால் பிறந்தது. அதனால் திருஅவையின் நற்செய்திப்பணி கிறிஸ்தவர்களுக்கு ஓர் தேர்வுப்பணி அல்ல என்றார். மாறாக, அது அவர்களது இயல்பு வாழ்க்கைப் பணியாகும். ஒவ்வொரு நாட்டுக் கிறிஸ்தவ மக்களும் நாளும் அவரவர் நாட்டு மண்ணில் தம் விசுவாசத்தை வாழ்வாக்குவதே கிறிஸ்தவ நம்பிக்கையை கலாசாரமயமாக்கும் வழியாகும். அதனால் கிறிஸ்தவ சமூகம் அந்நியத் தன்மை நீங்கிய மண்ணின் மக்களின் திருஅவையாகும்என்று தெளிவுபடுத்தினார்.

உ) திருஅவையின் நற்செய்திப்பணி கத்தோலிக்க தன்மை கொண்டது. கத்தோலிக்க தன்மை என்பது திருத்தந்தையின் நோக்கில் நிலப்பிடிப்பு, நில சுவீகரிப்பு அல்ல. மாறாக, வரையறைகள், வரம்புகள் கடந்து, அனைத்தையும், அனைவரையும் பரந்து நோக்கும் மனப்போக்கை உணர்த்துகிறது (எசயா.49:6, தானி.7:14, மத். 20:1-6, மத.22:1-14, மத்.25:31-46). அதாவது "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற தமிழ் பண்பாட்டுத் தன்மையும். பொருளும் கொள்ளலாம்.

ஊ) திருஅவையின் நற்செய்திப்பணி சுதேச மக்களுக்கு, மக்கள் மத்தியில் ஆற்றப்படும் ஒன்றென்பதால், மேலைத்தேய மறைபரப்பாளர்களை மக்களின் தாய் மொழியைக் கற்றுக்கொள்ளவும், அவர்களது கலாசாரப் பாரம்பரியங்களை அறிந்து, புரிந்துகொண்டு மண்ணுக்குரிய மக்களாகப் பணிபுரியவும் தூண்டுதலளித்தார்.

எ) மேலும், சுதேச திருஅவைகள் நற்செய்திப்பணியின் அகமாகவும், விளைநிலமாகவும் இருப்பதால், சுதேச கிறிஸ்தவர்களின் நற்செய்திப் பணிக்கான ஆர்வம், ஊக்கம், ஈடுபாடு, அர்ப்பணிப்பு என்பன அவசியம் என்றார் (எபே. 5:25). இதனைச் செவ்வனே செய்வதற்கு சுதேச நற்பணியாளர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர்கள் உருவாக்கம் இன்றியமையாததாகும். சுயமொழி, கலாசாரம், அறிந்த அவர்களால் மண்ணின் பணியாளராகலாம். மக்களுக்குப் பணிசெய்து அவர்களால் மண்ணோடு மறையலாம். அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கு வாய்ப்பில்லை. சுதேசிகளிலும் நற்செய்திப்பணி அல்லது மறை

**அருட்பணி கலாநிதி ஜெராட் ட ரொசய்ரோ அ.ம.தி.**

பரப்பு ஆர்வம் வளரும், நற்செய்திப் பணிக்கான அழைத்தல் தோன்றும். இவை திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களின் தூரநோக்கு அறிவு ரைகளாகும்.

ஏ) சுதேச குருக்கள் சொந்த மண்ணில் பிறநாட்டவராகும் நிலையும், தங்களைத் தனிமைப்படுத்தி தனிக்குழுக்களாக வாழ்வதும், துறவறசபைகள் தங்களுக்கென்று நிலம், தனிப்பணி என வரையறையிட்டு, கூட்டுப்பொறுப்பின்றி செயற்படுவதும் தவிர்க்கப்பட வேண்டியதாகச் சுட்டிக்காட்டினார்.

ஐ) நற்செய்திப் பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, மக்களோடு வாழ்ந்து, நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்து மறைந்த புனிதர்கள் பிரான்சிஸ் சவேரியார், பாத்லோமோ டி லாஸ் போன்றவர்களை நற்செய்திப் பணிக்கு எடுத்துக்காட்டுகளாக நினைவு கூர்கின்றார்.

இவ்வாறு, நற்செய்திப் பணியில் முதற்கண் ஓர் சமூக, வரலாற்று ஆய்வின் தேவை, மக்களின் மொழியைக் கற்று, அவர்களின் கலாசார வாழ்வியலைப் புரிந்து கொள்வதன் அவசியம், சுதேச மக்களில் நற்செய்திப் பணிக்கான ஆர்வத்தைத் தூண்டுதல், சுதேசிகளை நற்செய்திப் பணிக்கு உருவாக்குதல் ஆகிய தூரநோக்குக் கொண்ட திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களின் படிப்பினைகளை இரத்தினச் சுருக்கமாக அறிந்த நாங்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அளிக்கும் நற்செய்திப்பணி சிறப்புச் செய்தியின் தொகுப்பைக் காண்போம்.

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்புச் செய்தி**

அ) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'நற்செய்தியின் மகிழ்ச்சி' எனும் தமது சுற்றுமடலில் நற்செய்திப் பணியாளர்களில் காணப்பட வேண்டிய இன்றியமையாத முதன்மைப் பண்பாக இயேசு அனுபவத்தைக் குறிப்பிட்டுள்ளார். மூவொரு கடவுளின் பெயரால் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் நற்செய்தியாளர்கள் என்ற புரிந்துணர்வுடன் "இயேசுக் கிறிஸ்துவுடனான ஒரு புதுப்பிக்கப்பட்ட சந்திப்புக்கு அனைத்துக் கிறிஸ்தவர்களையும்" அழைத்த திருத்தந்தை, 'நற்செய்திப் பணிக்கான சிறப்புச் செய்தியிலும்', முதற்கண் இயேசுக்கிறிஸ்துவில் அறிக்கையிட்ட நம்பிக்கையில் நற்செய்திப்பணியின் தன்மையை அறிந்துகொள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் பணிக்கிறார்.

அன்று, இயேசு தாம் விரும்பியவர்களை அழைத்து, தம்மோடு இருக்கவும், நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்படவும் அவர்களைப் பயிற்றுவித்தார் (மாற். 3:14). ஆயினும், சீடர்கள் கலிலேயாவில் உயிர்த்த இயேசுக்கிறிஸ்துவை சந்தித்த பின்பே (மத். 26:32) அவர்களில் இயேசு அவர்களை விரும்பி அழைத்த நோக்கம் செயல் வடிவம் பெற்றது. இயேசுவின் படிப்பினைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழவும், நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிக்கவும், நம்பிக்கை கொண்டோரை அறிவூட்டவும், பிறரன்புப் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடவும் ஆரம்பித்தார்கள். உயிர்த்த இயேசுவை சந்தித்ததால், இயேசு அவர்களைச் சந்திப்பதற்கு அவர்கள் காட்டிய திறந்த மனப்பான்மையால் அவர்களில் ஏற்பட்ட மனமாற்றமே அவர்களில், அவர்களால் இயேசுவின் நற்செய்திப்பணிக் கனவு நனவாகுவதற்கு காரணமாயிற்று.

(தொடரும்....)

# அமைதியே வாழ்வின் இலக்காக

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

அமைதியானவர்கள் தம் வாழ்வில் நிகழ்வுகளைத் தாங்கிக் கொள்வதை விட அவற்றை மகிழ்ச்சியாக அனுபவிப்பார்கள். அவர்களோடு இருப்பது மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்கத் தூண்



டும். அவர்கள் எச் சூழலையும் தம் வசப்படுத்தி மகிழ்ச்சியாக வைத்திருக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பார்கள்.

**1. உம்மை நடுநிலையோடு மதிப்பிடப் பழகுங்கள்.**

சிலர் தமது வாழ்வை அதிதீவிரமான பொறுப்புணர்ச்சியோடு செலுத்துவதனால் எளிதில் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். அவர்கள் தம்மை அளவுமீறி எடைபோடுகின்றனர். நாம் எங்கும் எதிலும் இன்றியமையாதவர்கள் என்று எண்ணுகின்றனர். தாம் இல்லாவிட்டாலும் உலகம் உருளும் என்பதை மறந்து விடுகின்றனர்.

அமைதியானவர்கள் இயற்கையின் வல்ல சக்திகளோடு தம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தாம் குறிப்பிடத்தக்கவர் அல்ல என்பதையும் தாம் அற்பமானவர்கள் என்பதையும் உணருகின்றனர். அவர்கள் தாழ்ச்சியுள்ளவர்கள். ஆனால் சுயமதிப்பீடு குறைந்தவர்களல்ல. வாழ்வில் தாம் செய்யும் பங்களிப்பு தனித்துவமானது என்பதை உணருகின்றனர்.

**2. உமது குணங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்**

பலர் தமக்குள்ளே என்ன நடக்கிறது என்று தெரியாததால் தமது வாழ்வில் பல முரண்பாடுகள், வேதனைகளை அனுபவிக்கின்றனர். தம்மைப்பற்றிய சரியான புரிந்துணர்வு அவர்களை அமைதியானவர்களாக்வும் எதையும் மேற்கொள்ளக்கூடியவர்களாகவும் ஆக்கும். மனித இயல்பிலே பாலியல் தவிர்க்க முடியாத ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப் பழகாததால் பல இளைஞர் யுவதிகள் பெரும் உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். பாலியல் தன்னிலே பாவமானது ஒன்றல்ல என்பதை உணரத்தவறுகின்றனர். ஒவ்வொரு பாலுணர்வும் ஒரு சோதனை என்று எண்ணுகின்றனர். இதனால் அவர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர்.

**3. வரலாறு பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்**

வரலாறு பற்றிய எமது அறிவு எமது எதிர்காலத்தை உள்ளச் சமநிலையோடு எதிர்கொள்ள உதவி செய்யும். எமது வாழ்வு பற்றியும் தற்கால நாகரீகம் பற்றியும் சரியான கண்ணோட்டத்தைக் கொடுக்கும். மனித விலங்குகள், தாவரங்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய அறிவு நமக்கு அவசியம். இந்த நூற்றாண்டில் ஆட்சிகளில் ஏற்பட்ட வெற்றி, தோல்விகள், வாழ்வின் முன்னேற்றங்கள் பற்றிய அறிவு நமக்கு அவசியம்.

மனிதன் அழியப்போகிறான், உலக முடிவு வந்துவிட்டது என்று மக்கள் கூறும் போது நாம் கிலேசமின்றி வாழுவோம். அனைத்திற்கும் மேலாக இப் பெரிய பிரபஞ்சத்திற்கு நாம் கொடுக்கவேண்டிய பங்கு உண்டு என்று உணரும்போது அது நமக்கு ஒரு குறிக்கோளை, உறுதிப்பாட்டை, உயர் பண்பைக் கொடுக்கம்.

**4. சற்றுத் தளர்வான நிலையில் வாழப்பழக வேண்டும்**

சற்றுத் தளர்வான நிலையில் வாழ்வதை உங்கள் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இடையிட்ட நேரங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது நாற்காலியில் அமர்ந்து உங்கள் நரம்புகளைத் தளர்வாக்கிக் கொள்ளுங்கள். கண்களை மூடி முகத்தைப் புன்முறுவலோடு வைத்துக் கொள்ளுங்கள். உங்களில் புன்னகை தவழும்போது நீங்கள் இளமையாகவும் கவர்ச்சியாகவும் தோன்றுவீர்கள்.

**5. எதிர்மறையான உணர்வுகளை விலக்குங்கள்**

கவலையோடு இருக்கும் பழக்கத்திலிருந்து விடுபடுங்கள். பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கும் போது நேர்மையாக முகங்கொடுங்கள். பிரச்சனைகளைப் பற்றி முன்கூட்டியே நினைக்க வேண்டாம். எப்பொழுதும் நம்பிக்கையோடும் துணிவோடும் இருங்கள். பகைமையைக் களைந்தெறியுங்கள். அனைவரையும் அரவணைக்கும் அன்பு உங்களை ஆட்கொள்ளட்டும். தாராளத்தன்மை, மன்னிப்பு, சரிசனை என்பவற்றை வளர்த்துக் கொண்டால் அமைதி ஏற்படும்.

**6. உங்களுக்காக வாழ்க்கைக் கோட்பாட்டை வளர்த்துக்கொள்ளுங்கள்**

இந்தப் பிரபஞ்சத்தின் பின்னணியில் ஒரு பெரும் சக்தி இருப்பதை நம்புங்கள். அந்த சக்தியின் சாயலாக விவிலியம் கூறுவதுபோல "கடவுளின் பிள்ளையாக"நீங்கள் படைக்கப்பட்டிருப்பதை நம்புங்கள். அப்போது 'அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்குத் தருகிறேன்" என்று இயேசு கூறியதுபோல உண்மையான அமைதியை அனுபவிப்பீர்கள்.

## காவலன் கலசம்

# தரமான வாழ்வே வரமான வாழ்வு

சேவியர்

'வெண்டிக்காயை உடைத்துப் பாத்து வாங்கு, முருக்கங்காயை முறுக்கிப் பாத்து வாங்கு' என்றெல்லாம் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். சந்தையில் பொருட்கள் வாங்கும் போது இதையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. வாங்கும் காய்கறி தரமான காய்கறியாய் இருக்க வேண்டும் எனும் ஆர்வம் தான் அதன் காரணம். எந்த விதத்திலும் ஏமாந்து விடக்கூடாது என்பதில் கழுகுக் கவனம் நம்மிடம் இருக்கும். புழு விழுந்த கத்தரிக்காய் ஒரு மூட்டை வாங்குவதை விட நல்ல கத்தரிக்காய் கால் கிலோ வாங்கவேண்டும் என்பது தானே நமது விருப்பம்.

இன்னும் ஒரு படி மேலே போய் புடவைக் கடையில் போய் பார்த்தால் தெரியும், நூலை இழுத்துப் பார்த்து, ஓரத்தைக் கசக்கிப் பார்த்து, 'இது ஒரிஜினல் தானா' என நாலு தடவை கடைக்காரரை இம்சைப்படுத்தி, மலை போன்ற புடவைக் குவியல்களிடையே ஒன்றை எடுக்க பெண்கள் நடத்தும் தேடல். நொந்து நூடில்ஸ் ஆகிப் போகும் கணவர்களுக்கென்றே கடைகளின் ஓரமாய் ஒரு சோபா போட்டிருப்பார்கள். அந்த சோபாக்களில் அமர்ந்து கணவர்கள் விடும் குறட்டைக்குக் காரணம், பெண்களின் தரமான புடவைத் தேடல் தான்.

இதே சிந்தனை தான் எந்த ஒரு பொருளை வாங்கும் போதும் இருக்கும். தங்கமோ, நிலமோ, உடையோ எதுவானாலும் தரமானதையே தேடுவோம். இதே சிந்தனை தான் நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் இருக்க வேண்டும். அதையே இயேசு விரும்புகிறார். தரமான கிறிஸ்தவ வாழ்க்கை நம்முடைய தினசரி வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும்.

இயேசு தன்னுடைய காலத்தில் ஆயிரக்கணக்கான ஆட்கள் தன் பின்னால் வரவேண்டும் என்று நினைக்கவில்லை. போகும் இடமெல்லாம் போஸ்டர் ஒட்டவேண்டும் என்றோ, கட் அவுட் வைத்துக் கௌரவிக்க வேண்டுமென்றோ அவர் ஆசைப்படவில்லை. ஒரு சின்ன குழு அதை மிகவும் நல்ல குழுவாக உருவாக்க வேண்டும் என்பது தான் அவருடைய சிந்தனை. அதனால் தான் வெறும் பன்னிரண்டு பேருடன் அவருடைய பணியின் அத்திவாரத்தை உருவாக்கினார். அவர்களுக்கு பணிவைப் போதித்தார், துணிவைப் போதித்தார், விசுவாசத்தைப் போதித்தார். இன்றைக்கு கிறிஸ்தவம் இத்தனை பெரிய அளவில் விரிவடைந்திருக்கக் காரணம் அந்த சின்னக் குழு தான். அவர்களுக்குள் இருந்து செயலாற்றிய தூய ஆவியானவரும், விசுவாசமும் தான்.

இன்றைக்கு நாடுகள் கடந்து, தேசங்களின் எல்லைகள் தாண்டி பயணம் செய்கிறோம். இயேசுவின் பயண எல்லை வெறும் 200 மைல் சுற்றளவு தான் என்கின்றனர் விவிலிய ஆய்வாளர்கள். எவ்வளவு தூரம் பயணம் செய்தேன், எத்தனை இலட்சம் மக்களை சந்தித்தேன் எனும் புள்ளி விபரங்களை இயேசு விரும்பவில்லை. பயணத்திலும் அர்த்தமான பயணத்தையே விரும்பினார். கிலோ மீட்டர்களால் தன்னுடைய பயணத்தை அவர் குறித்து வைக்கவில்லை. இயேசுவின் போதனைகள் கூட 'அளவு' எனும் புற எல்லையைத் தாண்டி, புனிதம் எனும் அக எல்லையையே குறி வைத்தது. அதில் தான் இறை வாழ்வின் உயர்ந்த தரம் அடங்கியிருக்கிறது. இயேசுவின் போதனைகள் சட்டங்களாக இல்லாமல் போனதன் காரணம் அது தான். சட்டங்கள் இருந்தால் வேறு வழியில்லாமல் அதைக் கடைபிடிப்பவர்களாகத் தான் மக்கள் இருப்பார்கள். பிறர் பொருளுக்கு ஆசைப் படாதே என்றொரு சட்டம் இருப்பதால் பிறருடைய பொருட்களை விட்டு வைக்கிறோம். ஆனால் பிறர் மீதான அன்பினால் நாம் அப்படி இருப்பதே உயரிய வாழ்க்கை ! அதனால் தான் இயேசு சொன்னார். "பாத்திரத்தின் வெளிப்பக்கத்தை சுத்தம் செய்வதல்ல, உள் பக்கத்தை சுத்தம் செய்வதே அவசியம்".

நல்ல இதயம் என்பது தரமான வாழ்க்கையின் அடிப்படை. தூய்மையான மனம், தூய்மையான சிந்தனை, இவை இருந்தால் நமது செயல்களும் நல்ல செயல்களாகத் தான் இருக்கும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்லுவார்கள். அகத்தின் அழகு மட்டுமல்ல அகத்தின் அழுக்கும் முகத்தில் தெரியும். என்னதான் தங்கத்தால் வேலி கட்டி, சர்க்கரைத் தண்ணீர் ஊற்றி வளர்த்தாலும் மாமரத்தில் மாதுளம் பழும் காய்க்கப் போவதில்லை. உள்ளே உள்ள தன்மை தான் செயலில் வெளிப்படும். எனவே தான் மனம் சார்ந்த போதனைகளை இயேசு முதன்மைப் படுத்தினார்..

ஆலயத்தில் இரண்டு காசு போட்ட விதவையை இயேசு பாராட்டிய தன் காரணம் அது தானே! அள்ளி அள்ளிக் கொடுப்பதல்ல முக்கியம். ஆனந்தத்தோடு கொடுப்பதே முக்கியம். பத்தில் ஒரு பங்கு கொடு என்பது சட்டம். அதற்காக பத்தில் ஒரு பங்கு கொடுப்பவர்களெல்லாம் ஆனந்தத்தோடு கொடுப்பார்கள் என்று சொல்லமுடியுமா? எவ்வளவு கொடுக்கிறாயோ அதை மகிழ்ச்சியோடு கொடு. என்பது தான் இயேசுவின் போதனை. இன்னும் சொல்லப் போனால் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல முக்கியம், எப்படிப்பட்ட மனநிலையில் கொடுக்கிறோம் என்பது தான் முக்கியம் என்கிறார் இயேசு.

ஒருவன் கொலை செய்யாமலோ, பாலியல் தவறு செய்யாமலோ, களவு செய்யாமலோ இருப்பதற்குக் "காரணம்" என்ன என்பதையே இயேசு நோக்கினார். நீ வெறும் சட்டத்துக்காக இதையெல்லாம் செய்தால் அதனால் எந்தப் பயனும் இல்லை. ஆனால் கடவுளின் மீதான அன்பினால் இதையெல்லாம் செய்தால் உனக்கு நிச்சயம் பலன் உண்டு. காரணம் அது தான் உன்னுடைய உண்மையான மனதை வெளிப்படுத்துகிறது. அதனால் தான் இயேசுவின் போதனை பத்து கட்டளைகளாக வரவில்லை. அன்பின் இரண்டு கிளைகளாக வந்தது.

**இறைவனை நேசி,**
**மனிதனை நேசி !** அவ்வளவு தான்.

கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, களவு செய்யாதே என்றெல்லாம் இயேசு போதிக்கவில்லை. அதன் அடுத்த நிலைக்குச் சென்றார். கொலை அல்ல, கொலைக்குக் காரணமான கோபம் கூட உன்னிடம் இருக்க வேண்டாம் என்றார். விபச்சாரம் செய்யாமல் இருப்பதல்ல, அடுத்த பெண்ணை இச்சையுடன் நோக்குவதையே நிறுத்து என்றார். களவு செய்யாமல் இருப்பதல்ல, அடுத்தவனை உன்னைப் போல நேசி என்றார்.

இயேசு வேர்களை விசாரித்தார். தூய்மையின் அடுத்தடுத்த நிலைகள் என்பது நமக்கு உள்ளே இறங்குவது. புனித பயணம் என்பது நாம் செல்வதல்ல, நமக்குள் செல்வது.

நோன்பு இருக்கவேண்டுமா? இரு. ஆனால் வேறு யாருக்கும் சொல்லாதே. செபம் மிகவும் நல்லது. ஆனால் அறைக்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டு செபம் செய். அதிகம் பிதற்றத் தேவையில்லை, அதிக நேரம் பேசத் தேவையில்லை. சுருக்கமாச் சொன்னாலே போதும். அது நல்ல ஆத்மார்த்தமான பிரார்த்தனையாக இருக்க வேண்டும். அவ்வளவு தான். இயேசுவின் போதனைகள் உண்மையானவை. தரத்தின் உச்சத்தைத் தொட்ட எளிமையான போதனைகள்.

மோசேயின் சட்டங்களை பல இடங்களில் இயேசு மாற்றிப் புதிய வழிகாட்டுதலை மக்களுக்கு வழங்கிய தன் காரணம் மக்களின் வாழ்க்கையை தரமானதாக மாற்றுவதற்குத் தான். மணமுறிவு என்பதை சகட்டு மேனிக்கு நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் இயேசு என்ன சொன்னார் ? ஆதியில் கடவுள் ஆணும் பெண்ணுமாகத் தான் படைத்தார். எனவே மண முறிவு என்பதை பாலியல் குற்றம் எனும் ஒரு காரணம் தவிர வேறு எதற்காகவும் பண்ண வேண்டாம் என்றார். 'உங்கள் கடின உள்ளத்தின் காரணமாகத் தான்' மோசே அப்படி ஒரு போதனையைத் தந்தார் என்று சொல்வதன் மூலம் இயேசுவின் சிந்தனை நமக்கு பளிச்சென தெரிகிறது இல்லையா ?

விபச்சாரப் பாவத்தில் பிடிபட்ட பெண்ணையும் மோசேயின் கட்டளையைக் காட்டி கற்களோடு விரட்டியது கும்பல். இயேசு சட்டங்களைப் பேசவில்லை. ஆதாரங்களைக் கேட்கவில்லை. சமூகத்திலிருந்து இந்தப் பிரச்சினையை அடியோடு அகற்றுவேன் என புரட்சி செய்யவில்லை. கூட்டத்தினரின் உள் மனதோடு பேசச் சொன்னார். **'உங்களில் பாவம் செய்யாதவன் முதல் கல்லை எறியட்டும்'** என்றார்.

இவ்வாறு இயேசுவின் வாழ்க்கை முழுவதுமே, தரமான வாழ்க்கைக்கான தேடலாகத் தான் இருந்தது. போதனைகள் அர்த்தமுள்ளவையாக மட்டுமே இருந்தது. இயேசுவைப் பின்பற்றும் நாமும் நிச்சயம் செய்ய வேண்டியது இது தான். தரமான வாழ்க்கையைத் தேடி ஓட வேண்டியது! போலித்தனமான வாழ்க்கையை விட்டு விலக வேண்டியது! ஆத்மார்த்தமான ஒரு அன்னியோன்யத்தை இயேசுவோடு உருவாக்கிக் கொள்ளவேண்டியது!

அதற்கு செய்ய வேண்டிய முதல் காரியம், பிறர் என்ன நினைப்பார்கள் எனும் சிந்தனைகளை விலக்க வேண்டியது. அதிக நேரம் செபம் செய்யாவிட்டால் மக்கள் என்ன நினைப்பார்கள்? நோன்பு இருக்காவிட்டால் என்ன நினைப்பார்கள்? ஏழைகளுக்கு தர்மம் செய்யாவிட்டால் என்ன நினைப்பார்கள்? கோயிலுக்கு பணம் கொடுக்கா விட்டால் என்ன நினைப்பார்கள்? இப்படிப்பட்ட பிறர் சார்ந்த சிந்தனைகளை ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியம்.



ஆன்மீகம் நமக்கும் இயேசுவுக்குமான அன்பைச் சொல்லும் பாதை. அதில் இயேசு என்ன சொல்கிறார், என்ன எதிர்பார்க்கிறார் என்பதே முக்கியம். பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதல்ல. அப்படித் தான் ஏரோது பயந்தான். விருந்தினர்கள் என்ன நினைப்பார்களோ என நினைத்து திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டினான். பிலாத்து, எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை எனக் கைகளைக் கழுவினான்.

அந்த பயம் இல்லாதவர்கள் இயேசுவை வாழ்ந்து காட்டினார்கள். அதிகாரிகளின் முன்னால் "உயிர்த்த இயேசுவுக்கு நாங்கள் சாட்சிகள்" என்றனர். சிலுவையில் என்னை தலை கீழாய் அறையுங்கள் என கேட்டு வாங்கி மரணத்தைப் பெற்றனர். அவ்வையெல்லாம் தரமான விசுவாசத்தின் சான்றுகளாய் இருந்தன.

நாமும் நமது வாழ்க்கையை ஒரு அவசரப் பரிசீலனைக்கு உட்படுத்துவோம். நமது செயல்களெல்லாம் ஒவ்வொரு நாளும் ஆழ்மன அன்பின் வெளிப்பாடாக இருக்கட்டும் என நினைப்போம். உள்ளத்தில் உள்ளதையே வாய் பேசும். எனவே உள்ளத்தை சீர்தூக்கிப் பார்ப்போம்...

**படித்ததில் பிடித்தது....**

**தரமான வாழ்க்கையே**
**வரமான வாழ்க்கை**
**என்பதை உணர்வோம்.**
**இறைவன் நம்மை ஆசீர்வதிப்பார்**

## காவலன் கலசம்

# வழிபாடு வாழ்வாகுமா!!

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**பலிப்பீடமும் நாமும்**

பலிப்பீடமில்லாமல் பலி செலுத்த முடியாது. அது தூயகத்திற்கு புறம்பே கொண்டாடப் படும் போதும்கூட பலிப்பீடம் முக்கியம் பெறுகின்றது. மக்களுக்கும் பீடத்திற்கும் மிக மிக நெருங்கிய உறவு பேணப்படு கின்றது. மக்கள் பீடத்தை நோக்கி வர வும் அதை அவதானிக்கவும் அதிலே இடம்பெறும் மறை உண்மைகளை அறிந்து, ஆய்ந்து, அதை உள்வாங்கி வாழ்வாக்க வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனின் இன்றியமையாத கடமை யாகின்றது. பீடத்தை அல்லது குருவைப் பார்க்காது திருப்பலியில் பங்குபெற்ற முடியாது. அப்படி நடக்குமானால் அது வழிபாட்டையும் எம்மையும் பிரித்து விடுகின்றது. 'நம் இறைவனாகிய ஆண்ட வருக்கு நன்றி கூறுவோம் அது தகுதியும் நீதியுமானது' என்று கூறுவதற்கு பொருத் தமும் தகுதியும் இல்லாது போய்விடும்.

ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு தேவாலயமும் கிழக்கு-மேற்குத் திசை கொண்ட கட்டமைப்பிலேயே கட்டப்பட்டது. இதன்போது பலி ஒப்புக்கொடுக்கும் குரு மக்களை நோக்கியே காணப்பட்டார். ஆனால் 8ம், 9ம் நூற்றாண்டுகளின் பின் கீழைத்தேய திருஅவை முறையைப்பின் பற்றிப் பீடத்தைக் கிழக்கு நோக்கி அமைத்த னர். இதனால் மேற்குப் பக்கம் நின்று கொண்டு குருவானவர் கிழக்கைப் பார்த்த வராய் பலி ஒப்புக்கொடுப்பார். இதன்போது இறைமக்கள் குருவானவரின் பின்பக்கத்தி லேயே காணப்பட்டனர். இதனால் குரு வானவர் இறைமக்களைப் பார்க்க முடிய வில்லை. இரண்டாம் வத்திக்கான் சங் கத்திற்குப் பின் இந் நிலை மாற்றப்பட்டு ஆரம்பகால, அதே பீட அமைப்பு முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. குரு மக்க ளைப் பார்த்துத் திருப்பலியை ஒப்புக்கொடுக் கவும், திருப்பீடத்தில் நடைபெறும் மறை உண்மைகளை மக்கள் கண்டுணரவும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் பாரிய இம்மாற்றத்திற்கு வழிவகுத்தது. ஆகவே, "புனித இடத்தில் பீடத்தின் மீது திருப்பலி நடைபெறும். பிற இடங்களில், தக்கதொரு மேசையைப் பீடமாகப் பயன் படுத்தலாம். ஆனால் எப்போதும் பீடத் துகிலும் திருமேனித் துகிலும் சிலுவையும் மெழுகுதிரிகளும் பயன்படுத்தப்பட வேண் டும்", (உ.தி.நூ.பொ.ப: 297).

**பீடத்தில் திருச்சிலுவை**

தொடக்கத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக் கும் குரு அவருக்கு முன்னால் இருந்த இயேசுவின் திருச்சிலுவையையே உற்று நோக்கித் திருப்பலியை ஒப்புக்கொடுப்பர் இயேசுவின்பாடுகள், மரணம், உயிர்ப் பைத் தியானித் துப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் பீடம் தூயகத்தின் நடுவிலே கொண்டு வரப்பட்டது (free standing altar). அதன் போது குரு மக்களை நோக்கி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். ஆனால்திருச்சிலுவை குருவானவருக்குப் பின்னால் சென்றபடியால் குரு சிலு-வையை நோக்கிப் பலி செலுத்த முடியா மல் போனது. இத னால் பீடத்தில் திருச் சிலுவை வைக்கப் பட்டு அடையாளப் படுத்தப்பட்டது.

**பலிப்பீடத்தைப் பயன்படுத்தும் போது கவனிக்கப்பட வேண்டியவை கள்:**

1. பலிப்பீடம் ஆல யத்தின் இதயமா-கும், ஏனெனில் நற்கருணை விருந்து ஒரு புனிதமான உணவாக இதன் மீது ஒப்புக்கொடுக்கப் படுகின்றது. இதன் மூலம் சிலுவையில் கிறிஸ்துவின் தியாகப்பலி மீண்டும் செயற் படுத்தப்பட்டு ஒவ்வொரு நாளும் அது நிறைவேற்றப்படுகின்றது. இதனால், தூய கத்தை நெருங்கி அதிலுள்ள பீடத்தை அலங்கரிக்கும் போது, முதலாவதாக இறைவனின் பிரசன்னம் நற்கருணையில் இருப்பதை அறிந்து தெரிந்து அதற்குரிய மரியாதையை ஆராதனையைச் செலுத் தத் தவறக்கூடாது.

2. கிறிஸ்துவின் பலியிடப்பட்ட பாஸ்கா உணவைக் கொண்டாட நாம் பலிப்பீடத் தைச் சுற்றி வரும்போதெல்லாம், அவரு-டைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் அவருடன் கலக்கின்றோம் அவருடைய உடலிலும் இரத்தத்திலும் பங்கு கொள் கிறோம் அவருடைய மீட்பின் அருளை நாங்கள் பெறுகிறோம். (தொடரும்...)




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

---

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**மூத்தில் வடித்த உருவம்**

1818 இல் இசி என்னும் இடத்திலுள்ள குருமடச் சிற்றாலயத்தில் செபித்துக்கொண்டி ருந்தபோது, 'சபை' ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணக் கரு முளைவிடத் தொடங்கியது. இதற்காகத் தன்னைக் கையளிக்க வேண்டும் என்ற ஆவல் அவரை உந்தித் தள்ளிக் கொண்டே இருந்தது.

இதை மனதில் கொண்டவ ராகத் திருஅவை அன்று வேண்டி நின்ற விசுவாசத்தை மக்கள் மத்தியில் உறுதிப் படுத்தும் பணியை மறைக்கல்விப் பணிகள் ஊடாகச் செயற்படுத்தினார். இவ்வகுப்புக்க ளில் இளம்பெண்கள், வயதுவந்தவர்கள் விருப்புடன் பங்குபற்றினர். இயேசு, மரி, சூசை நசரேத்தில் வாழ்ந்த வாழ்வை அதாவது இயேசு,மரி,சூசை என்பவர்கள் இவ்வுலக வாழ்வில் இறைவனை மாத்திர மன்றி வேறொன்றையும் நேசிக்கவு மில்லை, தேடவுமில்லை, ஆசிக்கவு மில்லை., அவர்களுடைய எண்ணங்கள், உணர்வுகள், விருப்பங்கள், செயல்கள், உறவுகள் யாவற்றிலும் மையப்பொருளாக விளங்கியவர் இறைவனே" என்பதையும் மூவொரு கடவுளின் சாந்தவடிவமான இக்குடும்பம் இறைதந்தையின் சித்தத் தோடு தம்மைப் பூரணமாக ஒன்றித்து கீழ்ப்படிவு, பற்றற்றதன்மை, எளிமை, விசுவாசம் நிறைந்த வாழ்வு வாழ்ந்த தையும் மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை தம்வாழ்வின் மாதிரிகைகளால் திருக்குடும் பத்தின் வாழ்வை வாழ வழிகாட்டினார். இவ்விதமாக மறைக்கல்வி வகுப்புக்களில் பங்குபற்றியவர்கள் "திருக்குடும்பத்தின் மக்கள்" என அழைக்கப்பட்டனர்.

காலம் உருண்டோடியது. இறைவன் தமக்குரிய காலத்தில் தம் மறைவான திட்டத்தைப் பியன்வெனு ஊடாகச்



செயற்படுத்தச் சித்தம் கெண்டார். 19ம் நூற்றாண்டில் பிரான்ஸ்நாடு பல்வேறு குழப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டிருந்தது. அரசியற் புரட்சியினால் மக்கள் பலதரப்பட்ட துன்பங்களுக்கு ஆளாகி வேதனையுற்றனர். குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர். குடும்பங்கள் பிளவுபட்டன. மக்கள் சிதறுண்டனர். விசுவாசம் தளர்வுறும் இக்கட்டான சூழ மைவு. இக்கால கட்டத்தில்தான் இறை வன் தன் மறைவான திட்டத்தை பியன் வெனுவுக்கு வெளிப்படுத்தினார்.

1820ம் ஆண்டு தைத்திங்கள் 08ம் நாள் ஒப்புரவு அருட்சாதனம் பெற வந்த பெண்ணொருவர் தாம் ஒரு துறவியாக வர விரும்புவதாகத் தந்தை பியன்வெனுவிடம் தெரிவித்தார். இன்னும் சில நாட்களின்பின் வேறு இருபெண்கள் இதேவித ஆவலைத் தந்தைக்கு வெளிப் படுத்தினர். இவ்வெளிப்பாடு பியன்வெனு வின் உள்ளத்தில் முளைவிட்ட திட்டத்தை இறைவன் உறுதிப்படுத்தும் வெளிப்பாடாக அமைந்தது. பியன்வெனு தனக்குக் கிடைத்த அனைத்து வெளிப்பாடுகளையும் அன்னைமரியிடம் ஒப்படைத்து, செபித்து வந்தார். இவைபற்றித் தனது ஆன்மீக வழிகாட்டியுடன் கலந்துரையாடி, அவரின் தூண்டுதலாலும், உற்சாகமூட்டும் வார்த் தைகளாலும் ஒரு சிறுகுழுவை ஒன் றாக இணைப்பதற்குமுன் அதன் வாழ்வுக் கான திட்டங்களைத்தீட்டி ஒழுங்குகளை யும் எழுதினார்.

1820 ஆண்டு வைகாசித் திங்கள் 28ம் நாள் திரித்துவ ஞாயிறன்று மூன்று இளம்பெண்களுடன் "திருக்குடும் பம்" என்னும் புதிய குழு லொறெற்றோ சகோர்தரிகள் என்ற பெயரில் முளைவி டத் தொடங்கியது. தந்தை பியன்வெனு தம் ஆசைகள், திட்டங்கள், வெளிப்பாடு கள் அனைத்தையும் பேராயரிடம் எடுத்துக் கூறி அவரது ஆசீரையும், ஊக்கத்தை யும், உற்சாகத்தையும் பெற்றுக்கொண் டார். சபையின் ஆரம்பம் இறைவெளிப்பாட் டின் அனுபவமாகவே தந்தை பியன் வெனுவுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரி லுமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

**இறைதிட்டமே பியன்வெனு தந்தை யின் திட்டம் ...**


"தமது திருவுளத்தின் மறை பொருளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். இது கிறிஸ்து வழியாக கடவுள் விரும்பிச் செய்த தீர்மானம். கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலை மையில் ஒன்றுசேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்" (எபே 1:9-10) இறைதந்தையின் இத்திட்டத்தை நிறை வேற்ற ஆர்வமும், ஆவலும் கொண்ட பியன்வெனு கனவு கண்டார். அது எப்படி யென்றால் "பாரிய ஒரு விருட்சம். அதில் பல இன வண்ணப்பறவைகள் வந்து ஒன்றுகூடுகின்றன. வித்தியாசமான வேறு பாடுகளைக்கொண்டவைகள்ஒரே குரலாக "இறைவன்மாத்திரமே, அவருக்கே மகிமை" என்று பாடுகின்றன. இதேபோல் தம் சபையில் இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகள் கடந்து பெண்கள், ஆண் கள், சிறுவர்கள், இளையோர், துறவறத் தார், குருக்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து இறைதந்தையை மகிமைப்படுத்தவும், இயேசுவின் மீட்புப் பணியில் பங்குகொண்டு அவருக்குச் சாட்சியம் பகிரவும் கனவுகண்டார். அவ ரின் கனவும், இறைத்தந்தையின் மறை பொருளான திட்டமும் இன்றைய பிர பஞ்சம் பற்றிய புதிய பார்வையில், புதிய கண்ணோட்டத்தில்"பாரிய குடும்பம்"என்ற விழிப்புணர்வில் நனவாகி வருகின்றது.

**பொருளாதாரமா? அருளாதாரமா?**

"கடவுள் உங்களை எல்லா நலன் களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ் நிலையிலும், எப்போதும் தேவையான தெல்லாம் உங்களுக்குத் தருவார், அனைத்து நற்செயல்களையும் செய்வதற் குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்.." (2கொரி 9:8) தந்தை பியன்வெனு மூன்று இளம்பெண் களுடன்குழுவை ஆரம்பித்தபோது மூன்று பிராங் மட்டுமே அவரிடம் இருந்தது. "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சி யையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத் 6:33) என்னும் இறைஇயேசுவின் வாக்கு மாறாத வார்த்தைகளில் நம்பிக் கைகொண்டு வருங்காலத்தைப் பற்றிய அங்கலாய்ப்பின்றி அன்றன்றைய இறைவ னின் வெளிப்பாடுகளுக்குத் தன்னைக் கையளிப்பதன் மூலம் இறைபராமரிப்பில் முழுமையாகத் தன்னைச் சரணடை வித்தார். இறையருளுக்கு மட்டும் தம் மைத் திறந்து வைத்தார். திருக்குடும்பத் திடம் விளங்கிய ஏழ்மை, வெறுமை, காத்திருத்தல், பகிர்தல், தாழ்மை, உழைப்பு, ஒருவர் ஒருவரைத் தாங்குதல், ஒருவர் ஒருவரில் தங்கியிருத்தல், ஒரு வர் ஒருவரை நிறைவுபடுத்தல், இறை-வனை மாத்திரம் அனைத்திலும் காணு தல் போன்ற அருட்செயல் நிறைந்த பண்புகளைச்சபையின் அழியாதசெல்வங் களாகச் சகோதரிகளின் உள்ளத்தில் அடித்தளமாகப் போட்டார்.

(தொடரும்...)

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

## அருட்பணி. செ. அன்புராசா அமதி

(புவி, வடமாராட்சி)
**கேள்வி: 2019 ஜனாதிபதித் தேர்தலில் இருந்து என்ன தெரிகின்றது?**
**ப:** புவி, நாடு இரண்டுபட்டுக் கிடக்கிறது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே:** 2019 ஜனாதிபதித் தேர்தலில் நாம் எதிர்பார்த்தது நடக்கவில்லையே!?
**ப:** ஆனந்தன், நாம் எதிர்பார்ப்பதில் எது நடக்கிறது! 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை, காலம்செய்த கோலமடா கடவுள் செய்த குற்றமடா கடவுள் செய்த குற்றமடா!'

(பிரியா, மன்னார்)
**கே:** 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கின் றீர்களா?
**கே:** பிரியா, நிச்சயமாக மாற்றங்கள் உண்டு. ஆனால், அம்மாற்றங்கள் நமக்கு ஏமாற்றங்களாகவும் மாறலாம்!

*(குணம், யாழ்ப்பாணம்)*
**கே:** 'தமிழ் இனத்திற்காக என் உயிரை யும் கொடுப்பேன்..' எனக் கூட்டமைப்பின் தலை-வர் கௌரவ இரா. சம்பந்தன் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறியிருக்கின்றாரே! இவர் கூறுவது உண்மைதானா அல்லது நடிப்புத்தானா!?
**ப:** புவி, 'தமிழ் இனத்திற்காக என் உயிரையும் கொடுப்பேன்!' எனக் கௌரவ இரா. சம்பந்தன் அண்மையில் சொல்லியிருந்தது உண்மைதான். மேற்சொன்ன கருத்துக்கு மூன்று வாய்ப்புக்கள் உள்ளது! 1)உண்மையாக இருக்கலாம் அல்லது 2) நடிப்பாக இருக்கலாம் அல்லது 3) உண்மையான நடிப்பாகவும் இருக்கலாம்! கௌரவ இரா. சம்பந்தனின் இக்கருத்துக் குறித்து ஒருவன், 'இதுதான் நீ நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்யும் ஒரே ஒரு நன்மை!' என்று கவுண்டமணி கூறுவதுபோல முகநூலில் போட்டிருக்கிறான். இதனை அவதானித்த என் நண்பன் ஒருவன், "செய்யவேண்டியதை விரைவாகச் செய்யும்!" என மேலும் ஒரு விவிலியப் பார்வையையும் சேர்த்திருந்தான்!

*(வசந்தன், முல்லைத்தீவு)*
**கே:** அடுத்தடுத்து நடைபெறப்போகும் (நாடாளுமன்ற, மாகாணசபைத்) தேர்தல்களால் நமது அரசியல்வாதிகள் நாட்டின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டினை முன்னோக்கிக் கொண்டுசெல்வார்கள் எனக் கருதுகின்றீர்களா?
**ப:** வசந்தன், தற்போதைய நிலையில் நம் நாட்டின் அரசியலையும் நம்முடைய அரசியல்வாதிகளையும் நோக்குகையில் நோயாளிக்கு நோவு நீக்கியைக் (pain killer) கொடுத்து வருத்தத்தை வெளிக்காட்டாமல் இருக்கிறார்களே தவிர அதனைச் சுகப்படுத்த அல்லது குணமாக்க முயல்வதாகத் தெரியவில்லை! போகிற போக்கினைப் பார்த்தால் நோயாளியின் நிலை கவலைக்கிடமாகத்தான் போகும்! எப்படியென்றால், அறுவைச் சிகிச்சை வெற்றி, ஆனால், ஆள் 'அவுட்' (out)!

*(தனு, மன்னார்)*
**கே:** பெரும்பான்மையினரின் கீழ் சிறுபான்மையினர் இருக்கவேண்டும் என்ற மனநிலை நாளுக்குநாள் வளருகின்றதே! இத்தகைய போக்கு நாட்டுக்கு நன்மை பயக்காது! இம்மனப்பாங்கை இல்லாமலாக்க வழியென்ன?
**ப:** தனு, ஆண்டான் அடிமை மனநிலை அகலவேண்டும் அல்லது அகற்றவேண்டும்! மிக நேர்த்தியாகப் பரவத் தொடங்கியிருக்கும் வாத நோய்களுக்கு அவசர சிகிச்சை உடனடியாக ஆற்றப்பட வேண்டும்! இனவாதம், மதவாதம், பிரதேசவாதம், வர்க்கவாதம் போன்ற வாதங்களை நீக்க வழிவகைகள் செய்யப்படவேண்டும். வாத மடக்கி, ஆடாதோடை, நொச்சி போன்ற மூலிகைகளை ஒன்றாகப்போட்டு அவித்து எல்லாருக்கும் குடிநீர்போல குடிக்கக் கொடுப்பதுபோல சகோதரத்துவம், சகவாழ்வு, இன மத நல்லிணக்கம் போன்ற மூலிகை களை இனியாவது பாடசாலைக் கல்வியுடன் சேர்த்து பருகக்கொடுக்கவேண்டும்! இல்லையென்றால், வாதங்கள்கூடி தீராத வருத்தத்தில்தான் முடியும்!

*(விடலை, மன்னார்)*
**கே:** இளம்வயதில் இருக்கின்றேன். படித்துவிட்டு வேலை பார்த்துக்கொண்டு இருக்கின்றேன். என்னுடைய நண்பியோடு நட்புடன்தான் பழகினேன். இப்போது அவளை நான் விரும்புகின்றேன். அவள் இப்போது படித்துக்கொண்டிருக்கிறாள். அவளும் தன் காதலை வெளிப்படுத்துகின்றாள்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

காதலைத் தொடரலாமா?
**ப:** தம்பி விடலை, 'காதல் சதைவசப்பட்டது', 'நட்பு மனவசப்பட்டது!' என்பார் கவிப்பேரரசு வைரமுத்து. நீங்கள் இவ்விடயத்தில் உணர்ச்சிவசப்படாமல் இருப்பதுதான் நல்லது என எனக்குப்படுகிறது! வேலை தேடிக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறீர்! உங்கள் நண்பியும் படித்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறீர்! நீங்கள் தேடும் வேலை கிடைக்கக் காலம் தாழ்த்தினால், பிறகு காதலிப்பதே உங்களுக்கு வேலையாகிவிடும்! ஆகவே, கவனம்! உங்கள் காதலில் அல்ல காலில் நிற்கிறவேலையை முதலில் கவனிப்பது இருவருக்கும் நன்மை நல்கும்!

*(மது, யாழ்ப்பாணம்)*
**கே:** பிள்ளைகள் இருந்தும் பெற்றோரைப் பிள்ளைகள் கவனிப்பது குறைவாக இருக்கின்றதே! பிள்ளைகள் பெற்றோர்களைக் கவனியாது விட்டால் பெற்றோர்கள் எப்படி வாழமுடியும்?
**ப:** பதில்: மது, 'எங்களுக்கு ஒரு பெண். இரண்டு சண். ஆனால் இப்போது கைகொடுப்பதோ பென்சன் (pension)!' என்றார்கள் ஒருதடவை ஒரு வயதான தம்பதியினர். என்ன செய்வது? கோழி மிதித்துக் குஞ்சுகள் சாகாத காலம் ஒன்றிருந்தது! இப்போது குஞ்சுகள் மிதித்துக் கோழிகள் முடமாகும் நிலை, காலம் தோன்றியிருக்கிறது! அதனால்தான், 'சில பெற்றோருக்கு இப்போது விலங்குகள் பிள்ளைகள் ஆகிறார்கள், பிள்ளைகள் விலங்குகள் ஆகிறார்கள்!'

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*
**கே:** எப்போதும் சிரித்த முகத்தோடு இருப்பவர்கள் பிரச்சினைகள், கவலைகள் அற்றவர்களா?
**ப:** றமேஸ், உண்மையில், சிரித்த முகத்தோடு இருப்பவர்கள் கவலைகள் அற்றவர்கள் அல்ல, கவலைகளைக் கையாளத் தெரிந்தவர்கள்! அதனால்தான், பிரச்சினைகள் வரும்போதும் கவலைகள் ஏற்படும் போதும் சிரித்த முகத்துடன் கவர்ச்சியாய் இருக்கிறார்கள்! 'சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே..' என அழகிய பழைய பாடல் ஒன்று இருக்கிறது. நான்கு வயதான குழந்தை ஒரு நாளுக்கு ஏறக்குறைய முன்னூறு தடவைகள் சிரிக்கிறதாம். நடுத்தர வயதினர் ஒரு நாளுக்குப் பதினைந்து தடவைகள்தான் சிரிக்கிறார்களாம் என ஓர் ஆய்வு தெரிவிப்பதாகப் பிரசித்திபெற்ற ஆங்கில எழுத்தாளரான றொபின் சர்மா தன்னுடைய நூலான நீ இறக்கும்போது யார் அழுவார்? என்ற நூலில் குறிப்பிடுகிறார். சிரிப்பதால் பல உள நோய்கள் மட்டுமல்ல உடல்நோய்களும் நீங்குவதாக நிரூபிக்கிறார்கள்! அதனால், இன்று சிரிப்புச் சிகிச்சை என்று கூறுகிற மனநல மருத்துவ சிகிச்சை முறையைப் பற்றிக் கண்டறியப்பட்டுள்ளது! அதற்காக, நான்கு வயதுக் குழந்தை ஒரு நாளைக்கு ஏறக்குறைய முன்னூறு தடவைகள் சிரிப்பதுபோல ஒருவர் தனியே சிரித்துக் கொண்டிருந்தால் கூட்டிக்கொண்டுபோய் மனநலப் பிரிவில் சேர்த்துவிடுவார்கள்! சிரியுங்கள், சேர்ந்து சிரியுங்கள் மற்றவர்களை சிரிக்க வையுங்கள், இதனால் நீங்கள் சீரும் சிறப்பும் அடைவீர்கள்.

*(காந்தன், கொழும்பு)*
**கே:** கேள்வி: சிலர் தனித்து இயங்குகின்றார்கள். சேர்ந்து, இணைந்து செயற்படுவது செயலாற்றுவது அவர்களுக்கு முடியாததாகி விடுகின்றது. இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?
**ப:** காந்தன், சில விடயங்களைத் தனித்துத்தான் செய்யவேண்டிய, செய்து முடித்துவிடவேண்டிய சூழல் ஏற்படுகிறது. எனினும், தனியாகச் பேசமுடியும், ஆனால், குழுவாகத்தான் சேர்ந்து கதைக்கமுடியும்! தனியாக புன்முறுவல் பூக்கமுடியும், ஆனால், குழுவாகத்தான் சேர்ந்து சிரிக்க முடியும்! தனியாக மகிழமுடியும், ஆனால், குழுவாகத்தான் கொண்டாடமுடியும்! ஆக, தனித்து செய்யவேண்டியவை சாதிக்க வேண்டியவை உண்டாயினும் சேர்ந்து செய்வதிலுள்ள, இணைந்து சாதிப்பதிலுள்ள அற்புதங்கள் அலாதியானது என்பதையும் மறக்கக்கூடாது!

*(வரதன், மன்னார்)*
**கே:** தொலைக்காட்சியைப் பார்த்து நிறையப் படிக்க வாய்ப்பிருக்கும்போது, அதனை அதிகம் பார்க்கக்கூடாது என என்போன்ற பிள்ளைகளுக்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஏன் கூறுகின்றார்கள்?
**ப:** உண்மையில், அதனைப் பார்த்துப் படிப்பதைவிட நடிப்பதே அதிகம் நடைபெறுகிறது! அதனால்தான், அவர்கள் அனுபவத்திலிருந்து சொல்லியிருக்கிறார்கள்! தொலைக்காட்சி நாளடைவில் தொல்லைக் காட்சியாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள் வரதன்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsappக்கோ அனுப்பி வைக்கலாம்.**

# எதிர்த்தாக்கம்

காலைக்குளிர் தணிய, பளிச்சென்ற வெயில் எறித்தது. அது ஹப்புத்தளை மலை நகரம். நகரைப் பார்ப்பதற்கும் அதே சாக்கில் முடிவெட்டுவதற்குமென சலூன் தேடினேன். 'மாத்தையா கொண்ட கப்பாண்ட ஔனத?" என சிங்களத்தில் வரவேற்றார். அந்த வளர்மதி சலூன் உரிமையாளர். அது வருடத்தின் முதல் மாதம். சுவரில் தொங்கிக் கொண்டிருந்த அநேக கலண்டர்கள் நாளை மாதத்தைக் காட்டுவதைவிட சினிமா நட்சத்திரங்களின் 'போஸ்களைக்' காட்டிக்கொண்டிருந்தன.

'ஏற்கனவே தலை மொட்டையாத்தான் இருக்கு. அதால கொஞ்சமா, சும்மா ஷேப் பேண்ணி விட்டாப் போதும் என அமர்ந்தேன். 'தமிழா? ஊர் எங்க? என்றார் கூடுதல் வரவேற்போடு. கரிசனையோடு வேலையில் ஆழ்ந்தார். ஆர்வமாக உரையாடினார். 'முந்தியெல்லாம் அந்தப் பக்கம் இருந்துதான் லயத்துப் பக்க ஸ்கூலுக்கு மாஸ்டர்மார் வருவாங்க, இப்ப நம்ம வூட்டுக்குப் பிள்ளாங்க நல்லாப் படிச்சு இங்கேயே மாஸ்டர்மாரா, டீச்சர்மாரா வந்திட்டாங்க' என நெஞ்சு நிமிர்த்தினார். மகிழ்ச்சி!

பல காலமாக வடக்கிலிருந்தே அநேக ஆசிரியர்களும், அதிகாரிகளும் மலையகத்திற்கும் தெற்கிற்கும், கிழக்கிற்கும், ஏன் வன்னிக்கும்கூட பணியாற்றச் சென்றிருக்கின்றார்கள். (மலையகத்திலே தான் தன் பணி தொடங்கியதாக என் தந்தையும் கூறிக்கொள்வார்) இவ்வாறான பணியை அவ்வப்பகுதி மக்கள் நன்றியோடு நினைவு கூருகிறார்கள். இருப்பினும் தருணங்களில் இப்பிரதேச வாசிகளில் சிலர் கடுமையான விமரிசனங்களையும் முன்வைப்பதுண்டு.

"முருங்கைக்காயோடும் வருவாட்டுப் பொதியோடும் திங்கள் அரைப்பொழுதில் வந்திறங்கும் இவர்கள், இங்கு தேயிலை, மரக்கறி, காட்டிறைச்சி, தேன், தயிர், பழம்.... எனப் பொதிசெய்து கொண்டு வெள்ளி அரைப்பொழுதில் தம்மூர் திரும்பி விடுவார்கள்" போன்றவை இன்றும் உலவும் கசப்பு. சிலர் வந்த இடத்தில் காணி, பூமி சொத்துக்களை தேடிக் கொண்டதாக குற்றச்சாட்டுக்கள் வேறு. இவ்வாறு உள்ளூரின் வளர்ச்சி பற்றி இவர்கள் கவலைப்பட்டதைவிட தம் சுயமுன்னேற்றத்தையே முன்னிறுத்தியதாகச் சொல்லப்பட்ட விமரிசனத்தில் உண்மை இருக்குமா?

சரியாகவோ, பிழையாகவோ 'பனங்கொட்டையர்'மீது ஒரு காழ்ப்புணர்ச்சி இருந்து வந்தது. அது பொறாமையினால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம். (வடக்கு தோற்றுப் போனதன் பிற்பாடு அவ்வுணர்வு சற்றுத் தணிந்திருக்கலாம்) கிழக்கு, வடக்கோடு இணைந்திருக்க விரும்பாமல் தனிவழிசெல்ல முடிவெடுத்தது. மலையகமோ தன் சுய அரசியலுக்குள் தன்வழியே போய்க்கொண்டிருக்கிறது. இலங்கைத்தீவில் தமிழரின் எதிர்காலத்தை அங்கலாப்போடு நோக்கும் வடக்கு ஒரு வங்குரோத்து அரசியலை நடத்திக்கொண்டிருக்கிறதா? வடக்கு கிழக்கும் இணைந்திருக்க வேண்டும் எனக் 'கெஞ்ச'வேண்டியிருக்கிறது. வடக்கு ஒருவேளை இங்கு மலையகத் தமிழரை இணைத்து அரசியல் நடத்த விரும்பியிருக்குமேயொழிய மலையகத் தமிழரோட்டு இணைந்து அரசியல் நடத்த ஆயத்தப்படவில்லைப்போலும். அரசியலில் இணைத்து என்பதும் இணைந்து என்பதும் வேறு வேறு அர்த்தம் தருவன. கிழக்கோ மலையகமோ டக்கோடு இணைந்தால், வடக்கின் தலைமையின் கீழ்தான் நித்தியமும் இருக்கவேண்டியிருக்கும் எனதேவை யங்க பயம் கொள்ளுகிறார்களோ? அப்படியான ஓர் அரசியல் பயத்தில் நியாயம் ஏதேனுமுண்டா? இலங்கையைப் பௌத்த சிங்களவரே ஆளவேண்டும் என ஒரு சாரார் நினைக்கின்றதுபோல், இலங்கைத் தமிழரை வடக்கே தலைமைதாங்க வேண்டும் என்று இன்னுமொரு தரப்பினர் நினைக்கின்றார்களா? பைபிளிலே ஓர் இடத்தில் : "நாசரேத்திலிருந்து (நாசரேத்து ஒரு விலாசமில்லாத கிராமம். முக்கியமில்லாத பலஸ்தீனச் சிற்றூர்) நல்லது ஏதேனும் வரக்கூடுமா"என்ற வசனமொன்று உண்டு.

**அருட்னி. செ.போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி)**
**"நறுக்கென்று – மூன்றுவிரல் கேள்விகள்" நூலிலிருந்து**

# உதயத்தை இதயத்திலே பதித்த பொன் விழா நாயகர்


தாயின் வயிற்றில் உருவாகு முன்பே இறைவனால் முன்குறித்து வைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு கிறிஸ்துவின் அன்புப்பணியைத் தொடர அனுப்பப்பட்டு, இன்று தனது பணி வாழ்வின் பொன் விழாவைக் கொண்டாடும் அருட்பணி. F. A.இராஜரத்தினம் அடிகளாரை வாழ்த்தி நிற்கின்றோம். அருட்பணி. F. A இராஜரத்தினம் அடிகளார் 12.02.1946 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் திரு. ஸ்ரான்லி யோசப் இராஜரட்ணம், திருமதி. ஒலிவ் சந்தியாப்பிள்ளை, இவரது ஞானப்பெற்றோர் திரு. பெனடிற், திருமதி. ஏப்லேற் ஆவர். பெற்றோரினதும், ஞானப்பெற்றோரினதும் விசுவாசத்திலும், பண்பாட்டிலும், பக்தியாலும் நல்ல கிறிஸ்தவப் பிள்ளையாக இவர் வளர்ந்தார்.

1950 - 1953 இல் மன்னார் திருக்குடும்ப கன்னியர் மட வித்தியாலயத்தில் மூன்று ஆண்டுகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். தந்தையின் இடமாற்றம் காரணமாகத் தன் சொந்த இடமான யாழ் நகருக்குச் சென்று புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவனாக இணைந்தார். தனது படிப்போடு தனது ஆலயத்தில் பீடப்பணியாளராகவும், பாடகர் குழுவிலும் சேர்ந்து பணியாற்றினார். விசுவாசமும், பயபக்தியும், நல்வளர்ப்பும் கொண்ட இவரின் தாய் தன் தவப்புதல்வனை ஆண்டவரின் சேவைக்கு அர்ப்பணிக்க விருப்பம் கொண்டதற்கிணங்க தன் மகனின் விருப்பம் கேட்டு அவரின் சம்மதத்துடனும், தந்தையின் விருப்பத்துடனும் 1957ம் ஆண்டு யாழ் புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்தார். தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் குருமட மாணவனாக 1962 வரை கல்வியைத் தொடர்ந்தார். குருமாணவனுக்கு இருக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பக்தி, படிப்பு போன்ற குணங்களில் சிறந்து விளங்கினார். குருமடத்தில் இருக்கும் போது, தந்தையின் இழப்பையும், தனக்கு ஏற்பட்ட விபத்தையும், ஏற்றுக்கொண்டு, தாயின் தைரியத்திலும், சகோதரர்களின் உற்சாகத்திலும் தனது குருத்துவப் படிப்பைத் தொடர்ந்தார்.

அருட்பணி. லூயி மரி பரான் அடிகள் அ.ம.தி வெண்பனி திரளும் கனடா நாட்டின் வடபகுதியில் பணிபுரிந்தவர் பரான் அடிகளார். பனிப்புயல் அடிக்கடி வீசும் பரந்த பிறையறீஸ் புல்வெளி பிரதேசத்தில் குதிரையின் மீது சென்று பலிப்பூசை நிறைவேற்றியும், திருவருட்சாதனங்கள் வழங்கியும் தம் பணியில் செயற்பட்டார். அவரது வாழ்வில் இயலாது என்ற சொல்லுக்கு இடம் இருக்கவில்லை. நற்செய்தி அறிவுரைகளின் படியான அர்ப்பண வாழ்க்கையின் மூலமாக மறைப்பணி ஆற்றுவதற்குக் குருக்களையும், மணத்துறவு ஆண்களையும் கொண்ட 'திருவுளச் சபை" என்னும் உலகுசார் அர்ப்பண வாழ்வு முறையை 1958 ஆடி 2ம் திகதி ஆரம்பித்தார். 1963ம் ஆண்டு அருட்பணியாளர் பரான் அடிகளார், அக்காலத்தில் யாழ் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய மேதகு. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையை சந்தித்து தம் சபையைப் பற்றி எடுத்துக்கூறியதன் விளைவாக மூன்று அருட்சகோதரர்கள் கனடா நாட்டிலுள்ள திருவுளச் சபைக்கு அனுப்பப்பட்டார்கள் . இம்மூவரில் ஒருவர் தான் இப்பொன்விழாக் காணும் அருட்பணி இராஜரத்தினம் அடிகளார் ஆவார்.

## இலங்கையில் திருவுளச் சபை உருவாக்கம்

இவர் 1969ஆம் ஆண்டு ஆனி 22ம் திகதி குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். அதன்பின் சபை நிறுவுனர் அருட்பணி. லூயி மரி பரான் அடிகள் இலங்கையிலே திருவுளச் சபையை உருவாக்கும் தலைமைப் பொறுப்பை ' அவரிடம் ஒப்படைத்தார். அத்துடன் இலங்கை இந்தியா நாடுகளில் திருவுளச் சபையின் தலைவராகச் செயற்படப் பணித்தார். இளமையும், கற்றலும், ஆளுமையும், இறைபக்தியும் கொண்ட அருட்பணி. இராஜரத்தினம் அடிகளார் திருவுளச் சபையை இலங்கையில் தொடங்கினார்.



அருட்பணி. F. A. இராஜரத்தினம்

பொன்விழா நாயகனின் பணி வாழ்வு. வானங்களைக் கடந்து சென்ற இறை மகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளோம். தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்தே தேர்ந்து கொள்ளப் படுகிறார்கள். காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணி புரிய ஏற்படுத்தப்படுகின்றார்கள். என்ற இறை வார்த்தைக்கேற்ப யாரும் இம்மதிப்புக்குரிய பணியை தாமே தேர்ந்து கொள்வதில்லை (எபி 14:5:4). அருட்பணி. இராஜரத்தினம் அடிகளார் தன் தலைமைப் பொறுப்பைக் கீழ்ப்படிவுடன் ஏற்றுக் கொண்டார்.

கனடா நாட்டிலே திருவுளச் சபைக்கான பயிற்சிகளைப் பெற்ற இலங்கையின் முதல் குருவாக இவர் திகழ்கின்றார். சிறிது காலத்தின் பின் சொந்த நாடு திரும்பிய இவர் ஆயரின் விருப்பத்திற்கமைய பங்குப் பணியையும், சபையின் குழுவாழ்வையும் ஒருங்கே நிறைவு செய்து, சிறப்புறப் பணியாற்றினார். வளரும் பணிவாழ்வில், சபையினருக்கு ஓர் மத்திய இல்லம் வேண்டியதாகவிருந்தது. ஆயர் மேதகு. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் மறைவுக்குப் பின்பு ஆயர் மேதகு. தியோகுப்பிள்ளை ஆண்டகை மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார். ஆயரின் அனுமதியுடனும், ஆதரவுடனும் பெறப்பட்ட முகமாலைப் பதி அழகிய கட்டிட அமைவுடன் உருவாகியது. இளம் குருவான இவர், சகல வேலைகளையும் நேரில் கண்காணித்துக் கைகொடுத்து சிறப்புறக் கட்டி முடித்தார். 'பரான் இல்லத்தை" சம்பிரதாய பூர்வமாக ஆயரவர்களால் திறந்து வைக்கும் வைபவத்தையும் நிறைவுபடுத்தினார். 'பரான் இல்ல" வாழ்வு முகமாலையைச் சூழவுள்ளவர்களின் வாழ்வையும் வளமாக்கியது. மின்சார வசதி, அஞ்சல் அலுவலக வசதி, தொழில் வசதி யாவும் பெற்று அக்கிராமம் உயர்வடைந்தது. வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆலயம் போல், முகமாலை ஆரோக்கிய அன்னை ஆலயமும் சிறியதொரு யாத்திரைத் தலமாக வழிபாடு, வணக்கம் தவறாது இடம்பெற வளர்ச்சியுற்றது.

**தொகுப்பு: பீற்றர் மூல அசிரியர் அருட்சகோ. மருசலீன், திருவுளச் சபை**

சுருங்கக் கூறின் முகமாலைக் கிராமத்தை நவீன பட்டினமாக்கும் திட்டம் அவரிடம் இருந்தது. 'பரான் இல்லம்" இருந்த காணி செந்நெல் வயலாகவும், பூத்துக் காய்க்கும் தோட்டமாகவும், பசுக்கள், கோழிகள் மலிந்த பண்ணையாகவும், தென்னைகள் நிறைந்த சோலையாகவும் மாறியது.

பயணம் செய்வோர் இடையில் தங்கிக் களைப்பு நீங்கிச் செல்லும் 'பாலை வனப் பசும்தரை போல்" மிளிர்ந்தது. சகல திட்டங்களையும் செய்ததுடன் செய்த பின் மத்திய இல்லப் பொறுப்பை அருட்பணி. கீதபொன்கலன் துரைசிங்கம் அவர்களிடம் ஒப்படைத்து, மீண்டும் பங்குப்பணி விரும்பி சிறந்த சேவையாற்றினார். வளர்ச்சிப் பாதையில் திருவுளச்சபை பொன் விழாக் காணும் தந்தை அவர்கள் (1969 - 2019) பரந்த நோக்குடன் பிறமத சகோதரர்கள் மட்டில் பெரிதும் மதிக்கப்பட்டவராக இருந்தார். முகமாலை பரான் தாய் இல்லமும், ஆரோக்கிய அன்னை ஆலயமும் திருவுளச் சபையை வளர்த்த 'அமுத சுரபி" என்று பயன் பெற்ற மக்களும் பயனாளிகளும் பெருமையடைகின்றார்கள். இன்று பல குருக்களும், மணத்துறவு ஆண்களும், குடும்பங்களும் திருவுளச்சபையை அணி செய்கின்றார்கள். இனக்கலவரங்களின் போது இன்னலுற்ற மக்களுக்கு வாழ்வாதார மனிதாபிமான உதவிகளையும் தந்தையவர்களின் தலைமையில் திருவுளப் பணிச்சபை மேற்கொண்டதையும் மக்கள் நன்றியோடு நினைக்கின்றார்கள். தந்தை அவர்களைத் தொடர்ந்து வந்த அருட்தந்தையர்கள் சிறப்பாக சபையை வழிநடாத்திட பொன் விழா நாயகர் ஆலோசகராக இருந்து வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. ஓய்வு பெறவும் மருத்துவ வசதி பெறவும் 1988ம் வருடம் தனது இடத்தை அருட்பணி பிலிப் அடிகளாரிடம் வழங்கி கனடா நாடு மீண்டும் சென்றார். அங்கிருந்தும் திருவுளப் பணியோர் நலன்களை அக்கறையுடன் கவனித்து வருகிறார். தமிழ் அகதிகளின் ஆன்மீக நலன்களையும், தேவைகளையும் கனடா நாட்டில் கவனிக்கும் பொறுப்பான பணியிலும் அவர் சேவைகளை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அவர் தொடர்ந்து பல்லாண்டு அமலன் அருட்குருவாய் பணிபுரிய வேண்டுதல் செய்கின்றோம். தந்தை அவர்கள் கனடாவில் வாழ்ந்தாலும் அவரது இதயத் துடிப்பு, இலங்கையை நோக்கியே இன்றும் இருக்கின்றது. தான் வளர்ந்த திருவுளச் சபை மட்டில் இன்றும் அவர் பற்றுக் கொண்டுள்ளவராக உள்ளார் என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கலாம். இவர் இனிவரும் காலம் முழுவதும் உடல் நலமும் உள்ளப் பலமும், ஆன்மீக வளமும் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

# யாழ் ஆயர்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குலால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி உதவி புரிந்துள்ளார்.

### மேய்ப்புப் பணி விரிவாக்கம்

- மேய்ப்புப்பணி மாநாடு மதிப்பீடு பண்டத்தரிப்பில் இடம்பெற்றது. இதில் பயனுள்ள பலகருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.
- சமூகத் தொடர்பு ஆணைக்குழுவிற் கென' பணியகம் கட்டுவதற்காக யாழ் மறைக்கல்வி நிலையப் பகுதியில் அத்திவாரம் இடப்பட்டுள்ளது.
- முல்லைத்தீவுப் பங்கை இரண்டாகப் பிரித்து சிலாவத்தைப் பங்கு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.
- நீதித்துறையில் இயேசுவின் விழுமியங்கள் நிறைந்து காணப்படுவது மக்களுக்கு நல்லது என்ற அடிப்படையில் இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

### அரசியல் பணி

கட்சி அரசியல் ஈடுபாட்டிலோ, வெறும் அறிக்கை விடுவதிலோ ஆயர் அக்கறை காட்டுவதில்லை. அரசியல்வாதிகள் ஒவ்வொருவரையும் சரியாக அறிந்திருப்பதோடு, அவர்களுக்குச் சொல்ல வேண்டியதை எவ்வித தயக்கமுமின்றிச் சொல்லும் துணிச்சலும் கொண்டவர். அரசியல் விடயத்தில் எவை சாத்தியமானவை எவை சாத்தியமற்றவை என்பது பற்றித் தெளிவுடன் செயற்படுபவர். அரசியல் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் வருகின்ற போது மக்கள் பிரச்சினையைத் தெளிவாக எடுத்துக் கூறும் ஆற்றலும் கொண்டுள் ளார்.

### சாதிய சமத்துவ மனப்பாங்கு

ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தையும் திருச்சபையையும் சீரழிக்கும் காரணி களில் சாதிய சமஉரிமை மறுப்புமுக்கிய காரணியாக விளங்குகின்றது. இதனால் ஆயர் அவர்கள் பங்குகளில் சாதிய சமத்துவத்தை உருவாக்கப் பெரும் முயற்சி மேற்கொண்டு வருவது பலரும் அறிந்ததே. இம்முயற்சியில் தானே சாதிய சமத்துவ மனப்பாங்கோடு செயற்படுவதை இவர் குருக்களுக்கு வழங்கும் பணிகள் மற்றும் உயர்கல்வி வாய்ப்புகள் என்பவற்றில் தெளிவாகக் காண முடியும். 'இது இவரில் காணப்படும் ஒரு முன்மாதிரியான பண்பு என்பதைப் பலர் அறிவது நல்லது.

சாதிய சமத்துவம் கொண்ட பங்குகளை மறைமாவட்டத்தில் மலரச் செய்ய வேண்டும் என்பது ஆயரின் இலட்சியக் கனாவாக விளங்குகின்றமை போற்றப்பட வேண்டியது. இதை உணர்ந்து பலரும் இம்மனப்பாங்கை வளர்ப்பது இறையரசு பரவுவதற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்யும்.

### ஆயரின் ஆளுமைப் பண்புகள்

ஒவ்வொரு குருக்களதும் பலங்களை அடையாளம் கண்டு அவற்றை வளர்க்க உதவுவதும், பலவீனங்களைத் துல்லியமாக அறிந்து அவர்களை நல்வழிப்படுத்துவதும், பொறுமை காப்பதும். திருத்தமுடியாதெனக் கண்டவர்களை நீக்குவதும் இவரது நிர்வாகத்திறனின் பலங்களில் இன்னொரு பரிமாணமாகும். எவருக்காவது வைத்திய உதவி அல்லது சட்ட ஆலோசனை தேவைப்படும்போது அதற்குரிய வைத்திய ரிடமோ சட்டத்தரணியுடனோ தானே தொலைபேசியில் தொடர்புகொண்டு குறிப் பிட்ட நபருக்கு உதவுமாறு பரிந்துரைப்பார். இவ்ரது வேண்டுகோள் என்பதால் அவர்களும் விசேட கவனமெடுத்து உதவி தேவைப் படுவோர் மட்டில் கரிசனையோடு நடந்து கொள்கின்றனர். இது ஆயரின்உண்மையான அக்கறையாகவே கொள்ளப்படவேண்டும்.

குருக்கள் அனைவரும் திருச்சபைமற்றும் மறைமாவட்டதின் ஒழுங்கின்படியே தம் வாழ்வையும் வழிபாட்டையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் கருத்தாக உள்ளார். அதனால் அனைத்தும் நல்லமுறையில் இவர் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளமை இவரது நிர்வாகத்தின் இன்னொரு பலமாகும். மேலும் மறைவாட்டத்தில் புதிய விரிவாக்கப் பணிகளைத் திட்டமிடுவதும், திட்டத்தைப் படிப்படியாகச் செயற்படுத்தி நிறைவேற்றுவதும் இவரது ஆளுமைத் திறமைகளில் இன்னொரு விடயமாகும். ஆயரின் திறமைகளை இலங்கை ஆயர் மன்றம் அடையாளம் கண்டு மூன்று ஆணைக் குழுக்களில் முக்கிய பணிகளை இவருக்கு வழங்கியுள்ளன. இவற்றுள் செடேக்-கறிற்றாஸ் நிறுவனப் பணி இவருக்கு வழங்கப்பட்டமை நமது மறைமாவட்டதிற்கே பெருமை தருவது. ஆயரின் பணிகள் இன்னும் சிறக்க நமது ஆதரவையும் செபத்தையும் நல்குவோம்.

## திருமண வைர விழா வாழ்த்துக்கள்



### திரு.திருமதி செபமாலை மங்களம் தம்பதியர்

11.11.1959 – 11.11.2019

இருமனங்கள் அன்பால் இணைந்த இல்லறமென்னும்
நறுமணச் சோலையில் இன்பத்திலும் துன்பத்திலும்
உடல் நலத்திலும் நோயிலும் அறுபது ஆண்டுகள் நீவிர்
வாழ்ந்த பிரமாணிக்கமான இணைபிரியா வாழ்வுக்காக
எம் இதயம் நிறைந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்
நீவிர் இறையாசி நிறைவாய்ப் பெற்று
உடல் உள ஆரோக்கியத்துடன்
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**இதயம் நிறைந்து வாழ்த்தும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

மணல் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

AD 80

## 2020, பாகிஸ்தானில் சிறப்பிக்கப்படும் இளையோர் ஆண்டு

பாகிஸ்தான் தல திருஅவையில், 2020ம் ஆண்டு, இளையோரின் ஆண்டாகக் கொண்டாடப்படும் என்று, தல திருஅவை அறிவித்துள்ளதென ஃபீதேஸ் செய்தி கூறுகிறது. லாகூர் நகரில் உள்ள திரு இருதய பேராலயத்தில், அண்மையில் நிகழ்ந்த ஒரு விழாவில், கர்தினால் ஜோசப் கூட்ஸ், மற்றும் பாகிஸ்தான் திருப்பீடத்தூதர், பேராயர் கிறிஸ்ரோபர் கசிஸ் மற்றும் ஏனைய ஆயர்கள் இளையோர் ஆண்டு மெழுகுதிரி ஒன்றை ஏற்றி இளையோரின் ஆண்டைப்பற்றிய அறிக்கையை வெளியிட்டனர்.

பாகிஸ்தானில் வாழும் இளையோர், உயிர்த்த இயேசுவுடன் ஒன்றித்து தங்கள் உடன்பிறந்தோர் அனைவருக்கும் உற்சாகத்துடன் பணியாற்றத் தான் வாழ்த்துவதாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியிருந்த செய்தியை பேராயர் கிறிஸ்ரோபர் கசிஸ் அவர்கள் வாசித்தார்.

இளையோர் ஆண்டின் ஒருங்கிணைப்பாளராக பொறுப்பேற்றுள்ள ஹைதராபாத் மறைமாவட்டத்தின் ஆயர் சாம்சன் சுகர்டின் அவர்கள், பாகிஸ்தானில் வாழும் அனைத்து இளையோரின் வாழ்வு மேன்மையடைய கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஆன்மீக வளர்ச்சி என்ற அனைத்துத் துறைகளிலும் கத்தோலிக்கத் திருஅவை கூடுதல் கவனம் செலுத்த இந்த இளையோர் ஆண்டு உதவியாக இருக்கும் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

கத்தோலிக்க இளையோர் மீது மட்டுமல்லாமல், ஏனைய இளையோர் மீது, குறிப்பாக, சமுதாயத்தின் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டு, அதனால் மனமுடைந்து, போதைப்பொருள் பயன்பாடு போன்ற பழக்கங்களுக்கு அடிமையாகி இருக்கும் இளையோர் மீது கவனம் செலுத்த, இந்த இளையோர் ஆண்டு அழைப்பு விடுக்கிறது என்று, ஆயர் சுகர்டின் அவர்கள், விண்ணப்பித்தார்.

## சிறார் உரிமைகளைப் பேணுங்கள் யுனிசெவ் அழைப்பு

கடந்த முப்பது ஆண்டுகளில் சிறாரின் வாழ்வை முன்னேற்றுவதில் வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டிருந்தாலும், இதே முன்னேற்ற உணர்வைக் கடும் வறுமையில் வாடும் சிறாரும் அனுபவிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் அவசியம் என்று யுனிசெப் வெளியிட்ட புதிய அறிக்கை ஒன்று கூறியது.

நவம்பர் 20 உலகக் குழந்தைகள் நாள் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு, நவம்பர் 18 வெளியிட்ட இவ்வறிக்கை பற்றி செய்தியாளர்களிடம் பேசிய, ஐ.நா.வின், யுனிசெப் குழந்தை நல அமைப்பின் இயக்குனர் ஹென்றியட் போர் அவர்கள் இவ்வாறு கூறினார்.

## பாதுகாவலன் சந்தாவைச் செலுத்துங்கள்

பாதுபாவலன் பத்திரிகைக்குரிய வருட சந்தாவைப் புதுப்பிப்புடன், நிலுவைப் பணத்தைக் கார்த்திகை மாத இறுதிக்குள் செலுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## கிறிஸ்மஸ் இதழுக்கான ஆக்கங்கள்

எதிர்வரும் கிறிஸ்மஸ் சிறப்பு மலருக்கான ஆக்கங்களை வாசகர்களாகிய உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். உங்கள் ஆக்கங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னதாக கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சிறுகதை யாகவோ அனுப்பி வைக்கவும்.

## இயேசுவின் மலைப்பொழிவின் தெளிவாக்கம்

எட்டு வகையான மனிதர்களை - விபரமாக
எடுத்துரைத்த இயேசுபிரான் - விளக்கம் சொன்னார்
கட்டியபேறு இவற்றை ஏற்கும் போது - கட்டாயமாக
இட்டமுடன் எனக்காக - இதனை ஏற்று
இடுசாபக் கொடுமைகளைத் - தாங்கி நின்று
பட்டதெல்லாம் பொறுத்து நின்று - மனம் மகிழ்வீரானால்
பரலோக இராஜ்ஜியம் எந்நாளும் - உமக்கே உண்டு

முன்னோர்கள் சொன்னவற்றை - முழுவதும் அழிப்பதற்கோ
முறைமாற்றி வைப்பதற்கோ - நான் இங்கு வரவே இல்லை
எந்நாளுமே அவற்றை - நிறைவேற்றி வைக்கவே வந்தேன்
இவற்றை எந்தன் கடமையென - ஏற்றுக்கொண்டேன்
விண்ணோடு மண்ணுலகம் - இணைந்துள்ள காலம் மட்டும்
வேதவாக்கியங்கள் நிறைவேறும் - உண்மைகள் வாழும்
எந்நாளிலும் ஓர் எழுத்தும் - பொய்யாகாது
இது உண்மை இது உண்மை - மொழிந்தார் இயேசு

சொல்வது மட்டுமல்ல உபதேசங்கள் - எந்த நாளிலும்
சொல்வரும் நடப்பதுதான் - உயர் நியாயங்களாகும்
நல்லவற்றை பிறர்கேட்கச் சொல்லிவிட்டு - அவற்றை
நாம் மட்டும் மறந்துவிட்டால் -நியாயமாகுமா
எல்லார்க்கும் கிடைப்பதில்லை - விண்ணக அரசு
வேதம் சொன்னவற்றைக் கடைப்பிடித்தால் -நேரே செல்வார்
சொல்லுகிறேன் கேளுங்கள் - அதன்படியே நானும்
சொன்னபடி வாழ்கின்றேன் - என உரைத்தார் இயேசு

கொலை செய்தால் நரகம் உண்டென்று - நம்முன்னோர் சொன்னார்
கொடிய செயல் அத்தனைக்கும் - நரகம் உண்டு
இழிவான சொல்லாலே - பிறரை வஞ்சித்துப் பேசி
நெஞ்சத்தைச் சுடுவோர்க்கும் - நரகந்தான் உண்மைப்பரிசு
மலைபோன்ற உறவினரைத் - தூற்றினாலும்
உலைக்கூடம் நரகம் தான் - உம்மைத் திருத்தும்

மனிதர்பால் பகைமைகொண்டு - இறைவனுக்கு
மடி நிறைய - கைநிறைய - காணிக்கை செலுத்தியென்ன
புனிதமாக அப்பகைவனையும் - உறவாய்க்கொண்டு
புண்ணியத்தைச் செலுத்திக்கொள் - பிறகே கோயில்
அனைவரையும் இனியவராய் - அன்புறவில் இணைத்து வந்து
எதனை நீர் கொடுத்தாலும் - இறைவன் ஏற்றுக்கொள்வார்
மனித வாழ்வு கடவுளினால் - அமைத்த தன்றோ
மனம் கலங்காதே மதி மயங்காதே - என உரைத்தார் இயேசு

ஊருக்குத் தீமைகள் செய்து - நம் உள்ளம் மகிழ்வது பாவம்
யாருக்கும் தீமைகள் செய்யாது - நாம் ஒதுங்கி விடுவது லாபம்
அங்கம் முழுவதும் சென்று -தினம் அந்த நரகத்தில் வெந்து
பங்கப்படுவதை விட்டு - எமது கெட்ட எண்ணங்களை மாற்ற
தத்துவம்மிக்கது இறைவார்த்தை
அதை அலட்சியம் செய்வதை நீக்கு
எத்தனை தான் உண்டு நாக்கு
ஏன் இந்த வேதனைப் போக்கு

வன்னிவாழ் இதயம்
ம.சூசைமுத்து

### மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)ஆரம்ப அழைப்பு வைபவத்திலே இப்பாடசாலையில் உருவாக்கப்பட்ட தமிழர் பண்பாட்டு வாத்திய மாணவர் அணியினர் வரவேற்பை முதன் முதலாக இந் நிகழ்விற்கு வழங்கினர்.

2017, 2018ம் ஆண்டுகளில் கற்றல் செயற்பாடுகள், இன்னும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் சாதனையாளர்கள் சிறப்பான பரிசில்களைப் பெற்றனர். பல கலை நிகழ்வுகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலை எமது மறைமாவட்ட ஆயரின் சிறப்பான மேற்பார்வையில் அண்மித்த 03 வருடங்களாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## 1ம் ஆண்டு நினைவு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 04 |
| 06 | 12 |
| 1923 | 2018 |

அமரர்
### சிங்கராயர் மேரி அந்தோனியாப்பிள்ளை (ராசம்)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையை
என் நடுவர் எனக்குத் தருவார்.
(2 திமேத்தேயு 4:7,8)

இரக்கம் நிறைந்த யேசுவே உம்
அடியாள் சிங்கராயர் மேரி அந்தோனியாப்பிள்ளையை,
நிறைந்த நீடிய வாழ்வினால் இவ்வுலகில்
மகிழ்ச்சிப்படுத்தினீரே, கோடி நன்றிகள் உம் அழைப்பை ஏற்று
உம்பாதம் வந்திருக்கும் எம் அன்னையை, எல்லையற்ற உம் இரக்கத்தால்
நனைத்து இவரது குறை குற்றங்களை பெருமனதோடு மன்னித்து,
உம் நித்திய அரவணைப்பில் சேர்த்தருளும்

நாரந்தனை வடக்கு,
பெரியபுலம் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்
பிள்ளைகள்,
உறவினர்கள்

AD 81

## 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 01 |
| 03 | 11 |
| 1933 | 2014 |

அமரர்
### அருட்.சகோ.பிறிசில்லாபோல்
(திருக்குடும்ப சபை)

அருட்பணியில்
18.12.1954

5 வருடங்கள் கடந்தும் உம் நினைவுகள்
எம்மைவிட்டு நீங்கவில்லை
எம் குடும்பத்திற்கு எடுத்துக்காட்டாக
வாழ்ந்த அன்பான அக்காவே
உம்மை நாம் என்றும் நினைவு கூருகின்றோம்

4A, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்

போல் தேவநாயகம்
சகோதரனும், குடும்பத்தினரும்.

AD 82

## நினைவலைகள் 6ம் ஆண்டு



| மண்ணில் வாழ | விண்ணில் மகிழ |
|---|---|
| 17 | 05 |
| 01 | 12 |
| 1937 | 2013 |

அமரர்
### அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் J.P
(இளைப்பாறிய NRTB அத்தியட்சகர்)

"என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு"
தி.பா.103:1

நானிலத்தில் நீர் மறைந்து
ஆறு ஆண்டுகள் ஆனதே
நினைவுகள் எங்களோடு என்றும்
உறைந்திருக்கும் நித்தியத்துக்கும் இறைவன்
வீட்டில் அமைதிபெற்று வாழ்ந்திடுவீர்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக திருப்பலிகள்
06.12.2019 வெள்ளி காலை 6 மணி
ஆனையூர் புனித அடைக்கல நாயகி ஆலயம்
06.12.2019 வெள்ளி மாலை 5 மணி
குருநகர் புனித கார்மேல் மாதா ஆலயம்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

மாறா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD 72

## மாதகல் பங்கில் அன்பிய எழுச்சி மாதம்




அன்பியக் குழும வாழ்வு கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிநாதம் என்ற தொனிப்பொருளில் மாதகல் பங்கில் அன்பிய எழுச்சி மாதம் சிறப்பான முறையிலே கொண்டாடப்பட்டது. அதன் ஆரம்ப நிகழ்வாக அருட்பணி மில்பர் (CMS) அடிகளாரும், அவரது குழுவினரும் மாதகல் பங்கிற்கு வருகை தந்து அன்பிய வாழ்க்கை முறை பற்றிய கருத் தமர்வு நடாத் தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனைத்துப் பங்கு மக்களுக்கும் அன்பிய வாழ்க்கை முறையின் பயன்கள் பற்றியும், அன்பியக் குழும வாழ்வே கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வதற்கு அடித்தளம் என்பதை அறிந்து கொள்வதற்கும், ஒவ்வொரு அன்பியக் குழுமங்களிலும் தனித்தனியாகக் கருத்துரைகள், அருட்தந்தையர்கள் சதீஸ், அன்ரனி பாலா, ஞானரூபன், அருள்தாஸ் ஆகியோராலும், திரு அலெக்ஸ் அமலரட்ணம் அவர்களாலும் அருட்சகோதரர்கள் நரேஸ், மரியதாஸ் (IVD) ஆகியோராலும் வழங்கப்பட்டது.

இறுதியாக03.11.2019 அன்று அன்பியங்கள் தொடர்ந்து நடாத்தப்படவேண்டும். அன்பிய வாழ்க்கை முறையே கிறிஸ்தவ வாழ்க்கை முறை என்ற தொனிப் பொருளில் அருட்பணி ம.வி.இ.ரவிச்சந்திரன் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நிறைவுற்றது.

## புனித வின்சன் டீ போல் தேசிய சபைக்கூட்டத்தில் யாழ். பிராந்தியத் தலைவர்கள்



புனித வின்சன் டீ போல் தேசிய சபைப் பொதுக்கூட்டம் கொழும்பு கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் 23.10.2019 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைமாவட்டங்களிலிருந்து சபை பிராந்தியத் தலைவர்கள் ஆலோசனை சபைத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

## குருக்களுக்கான வருடாந்த ஞான ஒடுக்கம்




குருக்களுக்கான வருடாந்த ஞான ஒடுக்கம் இம்மாத முதல் வாரத்திலும், இறுதி வாரத் திலும் இரு குழுக்களாக நடைபெற்றது. இஞ் ஞான ஒடுக்கத்தில் மறைமாவட்ட ஆயர் ஓய்வுநிலை ஆயர் அனைத்து மறைமாவட்டக் குருக்களும் இணைந்து பங்குபற்றினர்.

ஞான ஒடுக்கத்தினை அவுஸ்ரேலிய நாட்டுக்குருவாகிய டேவிட் கோர் (CSSR) அவர்களும் ஸ்பெயின் நாட்டுக்குருவாகிய ஜோசப் டுரான் அவர்களும் நெறிப்படுத்தினர். எம் குருக்களின் ஞான வாழ்வுக்காக இறைமக்களாகிய நாம் என்றும் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## மாதா ரீவி பணிப்பாளர் யாழ் விஜயம்



தமிழ் நாட்டில் பிரபல்யமான மாதா ரீவியின் பணிப்பாளர் டேவிட் ஆரோக்கியம் (CEO) அவர்கள் கடந்த வாரம் யாழ்.மறைமாவட்டத்திற்கு விஜயம் செய்தார். ஆயர் அவர்களைச் சந்தித்த பணிப்பாளர் கத்தோலிக்க திருஅவையில் இன்று உள்ள நவீன தொடர்பு சாதனங்களின் தேவைகள் பற்றிக் கலந்தாலோசித்தார். யாழ். கத்தோலிக்க அச்சகத்திற்கு விஜயம் செய்த பணிப்பாளர் அவர்கள் கத்தோலிக்க அச்சகத் தினரின் பணியை பார்வையிட்டுத் தமது ஆலோசனைகளையும் ஆதரவையும் காட்டிச் சென்றார்.

## 150 ஆவது யூபிலி ஆண்டில் புனித மடுத்தீனார் திருவிழா




யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தின் வருடாந்தத் திருவிழாவானது 10.11.2019 அன்று சிறப்பாக நடைபெற்று முடிந்தது. 150 வது யூபிலி ஆண்டின் நினைவாகக் கட்டியெழுப்பப்பட்ட தூய மடுத்தீனாரின் திருவுருவச் சிலையை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் திறந்து வைத்தார்.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வைத் தொடர்ந்து யாழ் ஆயர் தலைமையில் பெருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப் பெருவிழாத் திருப்பலியில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், சிறிய குருமட மாணவர்கள் இணைந்து சிறப்பித்தனர்.

திருவிழாவை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த மைதான நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகின. முதலாவதாக அயல் குருமட மாணவர்களுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. ஆதனைத் தொடர்ந்து புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்களுக்கும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியல் அருட்சகோதரர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியும், அருட்பணியாளர்களுக்கும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியல் வருட அருட்சகோதரர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியும், கயிறிழுத்தல் போட்டியும் இடம்பெற்றன.

புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபர் அருட்பணி.ச.யோ.க.பாஸ்கரன் அடிகளார் தலைமையில் இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உடையார்கட்டுத் திருஅவையில் திரு நிகழ்வுகள்



உடையார்கட்டு தனிப் பங்காக உருவெடுத்த பின்னர் முதல் முறையாக நமது ஆயர் அவர்களால் 13.10.2019 அன்று 41 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.



உடையார்கட்டுப் பங்கில் கடந்த 6.10.2019 அன்று 9 பிள்ளைகளுக்கு முதல்நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது.



உடையார்கட்டு புனித யூதாததேயு ஆலயத் திருவிழா கடந்த 27.10.2019 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்பணி. S.J. இம்மானுவேல் அடிகள் தலைமையில் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது.

கத்தோலிக்க அச்சகத்தில் கிறிஸ்மஸ் பொருட்கள் விற்பனைக்கு

- பாலன் குடில்கள்
- கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்கள்
- மின் குமிழ்கள்
- கிறிஸ்மஸ் மரங்கள்
- 2020 வேதாகம நாட்குறிப்பேடு
- மெழுகுவர்த்திகள்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.